காலைக்கதிர்
Kalaikkathir

**இனி இது ரகசியம் அல்ல!**

ஆளுநர் நியமன சர்ச்சை, மழை விட்டும் துவானம் விடாதமை போலத் தொடருவதாகத் தகவல்.

அதுவும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர்களின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு முறைப்பாடுகள் தொடர்ந்த வண்ணம் இருப்பதாகவும் தெரிகின்றது. பக்கம் 02 »

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | தை 01 | செவ்வாய்க்கிழமை 15.01.2019 | கதிர் 71

# மாகாணசபைத் தேர்தலுக்கான சட்டம் ஒரு மாதத்துக்குள் வரும்




## தமிழ்க் கூட்டமைப்பும் இணைந்து நடவடிக்கை என்கிறார் சுமந்திரன்

கொழும்பு, ஜனவரி 15

மாகாண சபைத் தேர்தல்களை பழைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் நடத்துவதற்கான இணக்கம் தென்னிலங்கையின் பிரதான கட்சிகள் இடையே ஏற்பட்டுள்ளமையை அடுத்து ஒரு மாத காலத்துக்குள் இதற்குரிய சட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் பின்புல அழுத்தத்தோடு இந்தச் சட்டமூலத்தைக் கொண்டுவரும் நடவடிக்கை அவசர அவசரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது என கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார். பக்கம் 11 »

## அமெரிக்கக் குடியுரிமையை துறக்கின்றார் கோட்டாபய?



கொழும்பு, ஜன. 15

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ, பக்கம் 11 »

## அதியுயர் சபையில் அடிதடி; 20 எம்.பிக்கள் மீது வழக்கு

கொழும்பு, ஜன. 15

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மோதல் தொடர்பில் 20 எம்.பிக்களுக்கு எதிராக வழக்கு பக்கம் 11 »

## ஜெனீவாத் தீர்மானத்திலிருந்து விலகவுள்ளது இலங்கை அரசு?

### தீவிர ஆலோசனையில் மைத்திரி

கொழும்பு, ஜன. 15

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானத்துக்கு வழங்கிய இணை அனுசரணையை விலக்கிக்கொள்வது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆராய்ந்து வருகிறார் எனத் தகவல்கள் வெளியாகி பக்கம் 11 »

## மொட்டுக் கட்சியிலிருந்தே நாட்டின் அடுத்த ஜனாதிபதி



### பஸில் ராஜபக்ஷ திட்டவட்டம்

கொழும்பு, ஜன. 15

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி ஸ்ரீலங்கா பொதுஜன பக்கம் 11 »




'காலைக்கதிர்' வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள் அனைவருக்கும் எமது இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்...!
புதிய நதியா நகைமாடம்
சிங்கப்பூர் தரத்திலான தங்க நகைகளை உத்தரவாதத்துடன் செய்து பெற்றுக்கொள்ள யாழ். நகரில் நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்.

புதிய நதியா நகைமாடம்
73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3261

சசிகா லேணர்ஸ் THE SASIKA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை DS NO - 822
முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்
தலைமைக் காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOT LINE: 077 722 6247
021 221 7678, 077 614 0361
sasika learners
sasikadrivingschool@gmail.com
கிளை நிறுவனங்கள்:
வேலணை 021 221 5472, 070 301 3012
மல்லாகம் 021 224 3393, 070 301 3014
சங்கானை 021 225 1664, 070 301 3016
பண்டத்தரிப்பு 021 225 2333, 071 255 4135
யாழ்ப்பாணம் (Town) இல.281C, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம். (போதனா வைத்தியசாலை பின்புறமாக) 021 222 8004, 070 301 5004
அனைவருக்கும் எமது இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்...!
வாகன விபத்தைத் தவிர்ப்போம் உயிர்களைக் காப்போம்.


Rube Since 1982 Jewellery
அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
ரூபி ஜூவல்லறி
HAPPY PONGAL
தங்க நகை உலகில் 36 வருடம் அனுபவம் வாய்ந்த நாங்கள் உலகின்பல பாகங்களிலும் இருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
யாழ். நகரிலோ இலங்கையில் வேறு எப்பாகத்திலோ எமக்கு வேறு கிளைகள் கிடையா.
சிங்கப்பூர் தரத்திலான 916 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.
இல: 227 - 229, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 6919
0777 344 074


# உயிரிழந்த தமிழக மீனவரின் சடலத்தை அடையாளம் காட்டினர் சக மீனவர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஒப்படைக்கப்பட்ட தமிழக மீனவரின் சடலத்தைச் சக மீனவர்கள் மூவர் அடையாளம் காட்டினார்கள்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை எட்டு மீனவர்கள் கஞ்சா போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டனர் என முன்னர் தகவல்கள் வெளியாகின.

பின்னர் இந்தத் தகவல்களைக் கடற்படையினர் மறுத்தனர். அத்துமீறி நெடுந்தீவுக் கடற்பரப்பினுள் மீன்பிடியில் ஈடுபட்டமையால்தான் எட்டு மீனவர்களையும் கைது செய்ததாக கடற்படையினரால் தகவல் வெளியிடப்பட்டது.

அதன் பின்னர் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்களை கடற்படையினர் கைது செய்ய முயன்றவேளை அவர்கள் தப்பி ஓடும்போது இரண்டு படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளாகின எனவும், அதனால் ஒரு படகில் இருந்த மீனவர்கள் எட்டுப் பேரும் கடலில் தத்தளித்த போது தம்மால் காப்பற்றப்பட்டார்கள் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்திய மீனவர்கள் எட்டுப் பேரையும் யாழ்.மாவட்ட நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கக் கடற்படையினர் முயன்ற போது, அவர்களை நீரியல் வளத்துறை அதிகாரிகள் பொறுப்பெடுக்கவில்லை. அவர்களிடமிருந்து படகுகளை மீட்காதமையால் மீனவர்களைப் பொறுப்பெடுக்கவில்லை என நீரியல் வளத்துறை தகவல்கள் தெரிவித்தன.

இந்நிலையில் ராமேஸ்வரம் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற கலையரசன் என்பவரது படகை இலங்கைக் கடற்படையினர் மூழ்கடித்தனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டு இருந்தன.

அதேவேளை எட்டு மீனவர்களையும் நீரியல் வளத்துறை அதிகாரிகள் பொறுபேற்க மறுத்தமையால் அவர்களை காங்கேசன் துறை பொலிஸாரிடம் கடற்படையினர் நேற்று முன் தினம் இரவு ஒப்படைத்தனர்.

இந்த நிலையில் தமிழகம் இராமநாதபுரத்தைச் சேர்ந்த கருப்பையா மாரிச்சாமி (வயது 55) எனும் மீனவரின் சடலத்தை நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் உயிரிழந்த மீனவரின் படகில் இருந்தனர் எனக் கூறப்படும் மூன்று மீனவர்களைக் காங்கேசன்துறைப் பொலிஸார் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சடலத்தை அடையாளக் காண்பதற்காக அழைத்தது வந்தனர். அவர்கள் மூவரும் சக மீனவரின் சடலத்தை அடையாளம் காட்டினார்கள்.

தமிழக மீனவரின் உயிரிழப்பு நீரில் மூழ்கியமையால் ஏற்பட்டது எனத் தமக்கு அறியவந்தது என இந்தியத் துணைத் தூதரக வட்டாரங்களில் இருந்து அறிய முடிந்தது. (ஐ-07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாணத்தில் புதிய ஆளுநர் சுரேன் ராகவனின் தமிழ்த் தேசிய சிந்தனைப் போக்கைச் சிலாகித்து இப்பத்தியில் விலாவாரியாக எழுதியிருந்தேன். அவரின் அந்த நிலைப்பாடே அவரின் பதவிக்கு ஆபத்தை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று தோன்றுகின்றது.

தமிழ்ப் பகுதியில் அரசியல் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கல் நிறுத்தப்பட வேண்டும் என்று வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் கொழும்பு ஆங்கில வார இதழுக்கு அளித்த செவ்வி கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரி தரப்பில் இப்போது வலுவாக இருக்கும் சில அரசியல் தலைவர்கள் இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தொடர்பு கொண்டு கடும் ஆட்சேபனை தெரிவித்திருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

தமது தரப்பின் அரசியல் முன்நகர்வுக்கு ஆப்பு வைக்கும் விவகாரமாக இது உருவெடுக்கலாம் என்று சு.க. – பொதுஜன பெரமுன தரப்பைச் சேர்ந்த வலுவான தலைவர்கள் சிலர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர் என்பது நம்பகரமாக அறிய வந்தது.

மத்திய கல்வி அமைச்சையும் முந்திக்கொண்டு, தைப்பொங்கலுக்கு முதல் நாளான திங்களன்று பாடசாலைக்கு விடுமுறை அளிக்கும் முடிவை தன்னிஷ்டப்படி வடக்கு ஆளுநர் எடுத்து அறிவித்தார் என்றும், அதனால் அவரைப் பார்த்து கிழக்கு ஆளுநரும், அவர்களைத் தொடர்ந்து ஏனைய தமிழ் பாடசாலைகளுக்கு மத்திய அரசின் கல்வி அமைச்சு அதிகாரிகளும் அந்த முடிவை எடுக்க வேண்டிய நிலைமைக் குத் தள்ளப்பட்டனர் என்றும் ஜனாதிபதியிடம் இந்தத் தரப்பு கள் சுட்டிக்காட்டின என்றும் தெரிகின்றது.

இதேசமயம், மேற்கு மாகாண ஆளுநர் அஸாத் சாலியின் சில செயற்பாடுகளும் ஆரம்பகத்திலேயே ஜனாதிபதிக்கு நெருக்கடியைத் தந்திருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

கொழும்பு நுகேகொடையில் உள்ள பாடசாலை ஒன்றுக்குச் சென்ற ஆளுநர் அஸாத் சாலி, அங்கு ஞாயிற்றுக்கிழமைகளில் பௌத்த அறநெறிப் பாடசாலை நடைபெறாதமையைக் கண்டித்தமையுடன், அதனை உடன் ஆரம்பிக்க வேண்டும் என அதிபருக்குக் கண்டிப்பான – கடுமையான – உத்தரவை வழங்கினார் என்று கூறப்படுகின்றது. இதையடுத்து நேற்று அங்கு பெற்றோர்கள், பாடசாலை சமூகத்தினர் ஒன்று திரண்டு ஆளுநரின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர். முஸ்லிமான ஆளுநர் பௌத்த, சிங்கள அதிபர் ஒருவரை பௌத்த அறநெறிப் பாடசாலை விவகாரம் தொடர்பாக அச்சுறுத்தியுள்ளார் எனப் போராட்டக்காரர்கள் சீற்றத்துடன் குறிப்பிட்டனர்.

வடக்கு மக்களின் நலனை இலக்காக வைத்து, சுயாதீனமாயும், நீதி, நியாயமாகவும், பக்கச்சார்பின்றியும் வடக்கு ஆளுநர் செயற்படுவார் எனின் இந்தப் பதவியில் அவர் நீண்ட காலம் நீடிக்கின்றமை துர்லபம் என்கின்றன கொழும்பில் ஜனாதிபதிக்கு மிகமிக நெருக்கமான வட்டாரங்கள்.

ஏனென்றால், வடக்கு மாகாண ஆளுநரின் ஆங்கிலப் பத்திரிகைப் பேட்டி தொடர்பான செய்தி, அரசியலில் அவ்வளவு செல்வாக்குள்ள தலைவர்களை சீற்றமுற வைத்திருப்பதாகத் தெரிகின்றது. அந்தத் தலைவர்களைப் புறக்கணிக்க முடியாத இக்கட்டில்தான் தற்போது ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேன உள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

ஒட்டுமொத்தத்தில் ஒன்று நிச்சயம். தமிழர்களுக்கு நீதி, நியாயமாக நடந்து செயலாற்றக் கூடியவர்களுக்கு – இங்கு நீண்ட காலம் இடமளிக்கப்படமாட்டாது என்பது தான் அது.

- மின்னல் -

# பொங்கல் வாழ்த்துகள்

## வடக்கு ஆளுநரின் வாழ்த்து



தமிழர்களின் பண்பாடு, கலை, கலாசாரம் என்பவற்றை எடுத்தியம்பும் வகையில் தமிழர்கள் வாழும் அனைத்து பிரதேசங்களிலும் தொன்றுதொட்டு கொண்டாடப்பட்டுவரும் தைப்பொங்கல் பண்டிகையினைக் கொண்டாடும் அனைத்து தமிழ் மக்களுக்கும் எனது தைத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

உழவர்கள் தமது உழவுத் தொழிலுக்கு உதவும் சூரியனுக்கும் இயற்கைக்கும் நன்றி செலுத்தும் முகமாக தொன்றுதொட்டு கொண்டாடிவரும் இந்தப் பண்டிகை இயற்கைக்கும் மனிதனுக்குமிடையிலுள்ள நெருக்கமான பிணைப்பினை வெளிக்கொண்டுவரும் மிகச்சிறந்த பண்டிகையாகக் காணப்படுகின்றது.

மலர்ந்துள்ள புத்தாண்டில் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள புதிய அரசியல் எதிர்பார்ப்புக்களை சிறந்தமுறையில் நிறைவேற்றுவதற்கு தமிழ் அரசியல்வாதிகள் புத்திஜீவிகள் உள்ளிட்ட அனைவரோடும் இணைந்து பயணிக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

உங்கள் அனைவருக்கும் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களின் சார்பிலும் இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும் எனது சார்பிலும் இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!

**கலாநிதி சுரேன் ராகவன்**
**ஆளுநர், வட மாகாணம்.**

## முன்னாள் முதல்வரின் வாழ்த்து



'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள் – ஆனால் இவ்வருடத் தொடக்கத்தில் வழிகள் யாவும் மங்கலாகவே தெரிகின்றன. அரசியல் யாப்பு, தேர்தல்கள், ஜெனிவாக் கூட்டங்கள் எல்லாமே தமிழ் மக்களுக்கு மங்கலான பாதைகளையே காட்டி நிற்கின்றன. எமது வடகிழக்கு மாகாணத் தமிழ்ப் பேசும் மக்கள் கூட பல பல விதங்களில் பிரிந்தே காணப்படுகின்றனர். அரசியல் ரீதியாக, மத ரீதியாக, சமூக ரீதியாக இன்னும் பல வழிகளில் எமது மக்கள் பிரிந்தே நிற்கின்றார்கள். மேலும் அண்மைய வெள்ளம் புகுந்து வெள்ளாமை அழிவடைந்த நிலையில் பல இடங்களில் எம் மக்கள் காணப்படுகின்றார்கள். இவ்வாறான சூழலிலே தான் ஆதவன் தைத்திருநாளில் மேலெழ உள்ளான். இதுவரை அவன் செய்த நன்மைகளுக்கு நாம் நன்றி செலுத்தும் இந் நன்நாளில் இனி வருங் காலத்தில் மங்கலான பாதைகளுக்கு ஒளியூட்ட அவனிடம் இறைஞ்சுவோமாக!

சூரியன் பாற்பட்டதே இவ்வுலகம். அவன் ஒளிக்கதிர்கள் எம்மேல் படா தொழிந்தால் எமக்கு வாழ்வில்லை, வளமில்லை, வாழ்க்கையுமில்லை. அவன் ஒளிபட்டால் வாழ்வு துலங்கும்; வளம் பிறக்கும்; வாழ்க்கை சிறக்கும். சிறந்ததொரு வாழ்க்கையை எம் அனைவருக்கும் இவ்வாண்டில் வழங்கிட அந்த ஆதவனை ஆர்வத்துடன் இந்த நன்நாளில் வேண்டுவோமாக!

தமிழர்கள் அனைவருக்கும் ஒருமித்த - ஒன்றுபட்ட - வாழ்க்கையைக் கொடுத்து நம்பிக்கையூட்டும் எதிர்காலத்தை அவர்களுக்கு அவன் அருள்வானாக! - ஒற்றுமையே எமது பலம். ஒன்றுபட்ட எமது செயல்கள் வளந்தரும்; வாழ்வு தரும். இந் நன் நாளில் எல்லோரும் இன்புற்றிருக்க ஆதவன் ஆசி வழங்குவானாக!

இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
**முன்னாள் முதலமைச்சர், வடமாகாணம்**

## அங்கஜன் எம்.பியின் வாழ்த்து



திசைகள் எங்கும் ஒளி பெற்று வளம் பெற நேரான எண்ணங்கள் உதிக்கட்டும்.

உலக உழவர்களுக்கு உயிரூட்டிய கதிரவனுக்கு தைப் பொங்கல் திருநாளில் – அனைவரும் இணைந்து நன்றி செலுத்தும் பொன்நாளில் – படைத்தவனுக்கு அறுவடையாக புதிதாய் நாம் பெற்றதை சூரிய பகவானுக்கு உவந்தமுதளிக்கும் திருநாளாகிய தைத்திருநாளில் எல்லோரும் மகிழ்ச்சி பொங்க இவ் புதிய ஆண்டையும் வரவேற்று பரஸ்பர புரிந்துணர்வோடு நாம் இவ் வையகத்தில் பெற்றவற்றை அனைவரும் சமத்துவமான வகையில் பெற்றிட மகிழ்வுடன் அதன் சுவையை தித்திக்கும் பொங்கலாக அனைவருக்கும் வழங்குவோம்.

ஏர்பூட்டி உணவளிக்கும் உழவர்களை போன்று விவசாய பெருமக்களை போல் சிறந்த விதைகளை விதைத்து நாட்டு மக்களுக்காக அறுவடைகளை எதிர்பார்த்து காத்திருக்கும் உங்களில் நானும் ஒருவன். நாட்டு மக்கள் அனைவரும் எமது தன்னிறைவுக்காக தளராது அனைவரும் கைகோர்த்து உழைத்திடும் இவ் பொன்னான திருநாளில் மகிழ்ச்சி பொங்க எனது வாழ்த்துக்களையும் வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். எமது ஆரம்ப மகிழ்ச்சியும் நிலையான மாற்றத்திற்கு வித்திடட்டும்.

நமது பாரம்பரியமான வரலாற்றில் வரவேற்றல், விருந்தோம்பல், நன்றி செலுத்துதல் ஆகியவற்றை நீண்டநெடுங்காலமாக நாம் அனைவரும் பின்பற்றி வருகின்றோம். நமது பாரம்பரியங்கள், இதிகாசங்கள், வரலாறுகளில் இருந்து பல்லின, மற்றும் பன்மைத்துவ அடையாளங்களை நவீனயுக சந்ததியினர் கடைப்பிடித்து கொள்ள கூடிய வகையில் கலாச்சார நிகழ்வுகளின் ஊடாக கூட்டு பரிமாணங்களை ஏற்படுத்தி அவற்றை நாம் அடைந்து கொள்ள எமது நடைமுறை செயற்பாடுகள் அமைய வேண்டும்.

மறை எண்ணங்களாக அன்றி ஒளி கதிர்கள் இந் நன்நாளில் இருந்து பரந்தளவில் ஒளி பரவட்டும். நமது எண்ணங்கள் சுவை பெறட்டும்.

**அங்கஜன் இராமநாதன்**
**நாடளுமன்ற உறுப்பினர்.**

# வடக்குக்கு பொலிஸ், சட்ட அதிகாரம் வழங்க ஒருபோதுமே இடமளியோம்!

## ஜே.வி.பி. திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, ஜன. 15

புதிய அரசமைப்பினூடாக, வடக்கு மாகாணத்துக்கு பொலிஸ், சட்ட அதிகாரம் வழங்குவதற்கு தமது கட்சி ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று ஜே.வி.பி. ஊடகப் பேச்சாளர் விஜித ஹேரத் திட்டவட்டமாக அறிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலக நாடுகளைப் போன்று, இலங்கையிலும் ஏற்பட்டுள்ள சமூக மாற்றங்களைக் கருத்திற்கொண்டு, புதிய சமூகத்துக்குப் பொருத்தமான அரசமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம். அந்த அரசமைப்பினூடாக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட்டு, சகலரதும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

2015ஆம் ஆண்டில், புதிய அரசமைப்பு தொடர்பான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், 2006ஆம் ஆண்டு மஹிந்த ஆட்சியின் போதும், அதற்குரிய முன்னெடுப்புகள் இடம்பெற்றன. அந்த அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், ஜே.வி.பியின் பங்களிப்பு இருந்தது.

அதேபோல், அரசமைப்பு உருவாக்கத்துக்காக நியமிக்கப்பட்ட 21 பேர் அடங்கிய வழிநடத்தல் குழுவினால், ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரமுடியாமல் போனதன் காரணமாகவே, அந்தக் குழுவின் அறிக்கையை இன்றுவரை வெளிபடுத்த முடியாமல் போயுள்ளது. குறிப்பாக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்க, மஹிந்த அணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றன.



இவ்வாறான நிலைமையிலேயே, புதிய அரசமைப்பு வடிவம் ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லையென, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு, நாட்டைப் பிளவுபடுத்தும் என்றும் வடக்கையும் கிழக்கையும் ஒன்றிணைக்கும் என்றும், அரசமைப்பை நிறைவேற்றிக்கொள்ளக் கையுயர்த்தும் எம்.பிக்களுக்கு, 40 கோடி ரூபா வழங்கப்படுவதாகவும், போலிப் பிரசாரங்கள் செய்யப்பட்டன.

அதேபோல், 20ஆவது அரசமைப்புத் திருத்தம் பற்றியும் போலிப் பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. மஹிந்த அணியினர் மாத்திரமன்றி, ஐக்கிய தேசியக் கட்சியினரும் சுமந்திரன் எம்.பியும் கூட, இவ்வாறான பிரசாரங்களைச் செய்துள்ளனர். மக்கள் இவ்வாறான பொய்களை நம்பி ஏமாற்றமடையக் கூடாது-என்றார். (ஐ)

# கூட்டமைப்பின் கோரிக்கைக்கு பணிந்தே நடக்கின்றது ஐ.தே.க.

## கூறுகின்றார் தினேஸ் குணவர்தன

கொழும்பு, ஜன. 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டிய நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சி அரசு இருப்பதாக கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. அரசு, தனது காலத்தைக் கொண்டு செல்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 பேரின் ஆதரவும் தேவை. புதிய அரசமைப்பில் சமஷ்டி இல்லையெனப் பிரதமர் கூறினாலும் அதில் ஒரு சரத்தில்



ஒற்றையாட்சியை மாற்றியமைக்கும் காரணி உள்ளடக்கப்பட்டுள்ளது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன குறிப்பிட்டார். (ஐ)

# கிணற்றில் தண்ணீர் அள்ளிய மாணவி தவறி வீழ்ந்து சாவு!

வவுனியா, ஜன. 15

வவுனியா - தாலிக்குளம் பகுதியில் நேற்று முன் தினம் பாடசாலைச் சீருடைகளைத் தோய்ப்பதற்காக தோட்டக் கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்த மாணவி தவறுதலாகக் கிணற்றுக்குள் வீழ்ந்து மரணமானார்.

15 வயதுடைய சொக்கலிங்க குமார் லோபிகா என்ற பாடசாலை மாணவியே உயிரிழந்தவராவார்.

பெற்றோர் பிள்ளையைக் காணவில்லை எனத் தேடிய சமயத்தில் அவர் கிணற்றில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சடலத்தை மீட்டெடுத்த பொலிஸார் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# விமல் வீரவன்ஸ வழங்கும் நட்டஈடு ஒரு கோடி ரூபாவும் மக்கள் பணிக்கு!

## ரில்வின் சில்வா அறிவிப்பு

கொழும்பு, ஜன. 15

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸவினால் நீதிமன்றத் தீர்ப்புக்கமைய வழங்கப்படவுள்ள ஒருகோடி ரூபா நட்டஈடுத் தொகையை மக்கள் பணிக்காகச் செலவிடப்போவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அறிவித்துள்ளார்.

ஜேவிபியின் புலமைச் சொத்துக்களைக் கையாடிப் புத்தகமொன்றை வெளியிட்ட குற்றத்துக்காக வர்த்தக மேல் நீதிமன்றம் எதிர்மனுதாரரான விமல் வீரவன்ஸ ஒரு கோடி ரூபாவை இழப்பீடாக வழங்கவேண்டுமென கடந்த வெள்ளியன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்தத் தீர்ப்புக் குறித்து வினவியபோதே ரில்வின் சில்வா இவ்வாறு கூறினார்.

இந்தப் பணத்திலிருந்து ஒரு சதத்தைக் கூட தான் எடுக்கப் போவதில்லையெனவும் முழுப்பணத்தையும் மக்கள் பணிக்காகவே கட்சித் தலைமைத்துவத்திடம் ஒப்படைக்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)



# சப்ரகமுவ பல்கலையில் மருத்துவபீடம் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 15

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதேவேளை இரத்தினபுரி வைத்தியசாலையைப் போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்த்தும் நிகழ்வும் அன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் மருத்துவபீட மாணவர்கள் 75 பேர் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா தெரிவித்தார்.

மருத்துவக் கற்கைநெறியைத் தொடரும் மாணவர்களுக்குச் சகல வசதிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் கூறினார். (ஐ)

# மஹிந்தவே வேட்பாளர்

## என்கின்றார் குமார வெல்கம

கொழும்பு, ஜன. 15

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷவைத் தாம் பரிந்துரைக்கிறார் எனவும், அவர் வேட்பாளராக முன்னிலைப்படுத்தப்பட்டால் அதனைத் தேர்தல் ஆணைக்குழுவால் நிராகரிக்க முடியாது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர்



இதனைக் கூறினார்.

புதிய அரசமைப்பின் சமஷ்டிப் பண்புகள் முன்னிலை பெறுமாயின் அதற்குத் தாம் ஆதரவளிக்கப் போவதில்லை என்றும் அவர் கூறினார். (ஐ)

# சு.கவின் பிரபலங்கள் பலர் விரைவில் ஐ.தே.க. பக்கம்

## அகிலவிராஜ் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 15

நாட்டில் அடுத்துவரும் தேசிய தேர்தல் ஒன்றின்போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும், பொதுஜன பெரமுனவிலிருந்தும் மக்கள் எதிர்பாராத தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் வந்து இணைந்துகொள்வார்கள் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

யாப்பகுவ தொகுதியின் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறித்து வைத்துக்கொள்ளுங்கள். சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன ஆகியவற்றிலுள்ள பலர் எம்முடன் பேச்சு நடத்தி வருகின்றனர். தேசிய மட்டத் தேர்தல் ஒன்று வரும்போது அவர்கள் எம்முடன் வந்து அமர்ந்து கொள்வார்கள் -என்றார். (ஐ)



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## தைபிறந்தால் வழி பிறக்குமா?

இன்று தைப்பொங்கல் திருநாள்.

இயற்கையோடு இயைந்து வாழும் தமிழர்களுக்கு இது முக்கியமான பண்டிகை நாள்.

அவனியின் நாயகன் ஆதவன். அந்தச் சூரியனை ஏற்றிப் போற்றித் துதித்து அவனுக்கு நன்றி செலுத்தும் திருநாள் இது.

உலக இயக்க காரணன் அவனே. அவனின்றி அணுவும் அசையாது; அவனியும் அசையாது. அவனே சக்தியின் நாயகன். அவனே பூமிப்பந்துக்கு உயிரூட்டி, வலுவாகிய உணர்வையும் அளிப்பவன்.

காலைக்கதிர் பரப்பி, புவனத்தைப் பசுமைச் சோலையாக்கி, உலகின் உயிர்ப்பை நிலைநிறுத்தும் ஆதவனைத் தமிழர்கள் நன்றியோடு பொங்கல் படையலிட்டு வணங்கும் திருநாள் இன்றுதான்.

உயிர்ப்பின் மூலமும், அதன் இயக்கமும் கூட அவனியிலிருந்துதான் அவனிக்குக் கிட்டியது.

அந்த உண்மையை – யதார்த்தத்தை – உணர்ந்ததால் – எழுந்ததே இன்றைய பொங்கல் பண்டிகை.

காலைக்கதிர் மூலம் அவனிக்கு அவன் வாரி இறைக்கும் சக்தியே புவியின் அசைவுக்கும், இயக்கத்துக்கும், உயிர்ப்புக்கும் காரணம்.

இப்படி ஆதவன் வாரி இறைத்து அருளாய்ப் பொலியும் சக்தியை நம் பூமிப் பந்தில் பதிப்பவை பச்சைத்தாவரங்கள். உணவுச் சங்கிலியின் தோற்றுவாயாக அவை திகழ்வது சூரியனினால்தான்.

சூரியன் தன் கதிர் மூலம் அள்ளித் தரும் சக்தியைத் தம்மில் பதித்து விளைச்சலாகக் தருக்கின்றன தாவர வர்க்கங்கள்.

மானிடனின் – தமிழினத்தின் – பிரதான உணவான அரிசியை இப்படித் தாவர வர்க்கம் சூரியக் கதிர் மூலம் பெற்று விளைச்சலாகத் தரும் காலத்திலேயே இந்த நன்றிப் பண்டிகையாக சூரியனுக்குப் பொங்கலிட்டு மகிழ்கின்றான் தமிழன்.

தமிழேருழவன் தன் வயலில் கிடைத்த முதல் விளைச்சலை உலக நாயகனுக்குப் பொங்கலிட்டு முதல் மரியாதை செய்யும் இத்திருநாளே பொங்கல்.

இதுவே தமிழர் தம் வருடத்தின் முதல் நாள் என்பர்.

நமது பூமிப்பந்தின் சக்கர சுழற்சி ஓர் ஒழுங்கமைவானது. அது தன்னைத் தானே சுற்றியபடி பூமியையும் சுற்றுகின்றது. அந்தச் சுற்றலில் ஒரு புதிய அத்தியாயம் பரிணமிப்பதைக் காட்டும் நாளாகவும் இத்தைப்பிறப்பு அமைகின்றது.

பூமிக்கோளத்தின் இந்தச் சுழற்சியில்தான் காலச்சக்கரம் உருண்டோடுகின்றது. கால நிலை மாற்றங்கள், பருவ காலங்கள் நேருகின்றன.

தனு ராசியில் இருந்து சூரியன் மகரராசிக்குள் பிரவேசிக்கும் இத்தினத்தை அதனால் மகர சங்கராந்தி என்கிறோம். அது மகரத் திருவிழாவாகவும், தமிழர் தம் பண்டிகை நாளாகவும் கொண்டாடப்படுகின்றது.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது தமிழர் தம் நம்பிக்கை.

ஆனால் இன்றைய இந்தத் தைப்பிறப்பு தமிழருக்கு நம்பிக்கை தருவதாக விடியவில்லை என்பதுதான் எமது மக்களின் ஆதங்கம்.

நீண்டகாலக் கொடூர யுத்தத்தின் போரழிவுகளையும், பேரழிவுகளையும் சந்தித்துத் துவண்டு நிற்கும் நமது மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளுக்கும் நீண்டகால அரசியல் சிக்கலுக்கும் தீர்வு கிட்டுவதற்கு வாய்ப்புண்டு என்று நம்பமுடியாத – அவநம்பிக்கையான – நிலைமையில் தைப்பொங்கல் தினத்தில் தைமகள் பிறக்கின்றாள்.

2016 இல் தீர்வு, 2017இல் தீர்வு, 2018இற்குள்ளாவது தீர்வு என்று ஏங்கியிருந்த தமிழர்களுக்கு இனி எப்போதுமே தீர்வு கிட்டாது என்ற அவநம்பிக்கையான புறச்சூழலே கிட்டியிருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில், இதுவரை காலமும் தள்ளிப் போடப்பட்டு, கிடப்பில் கிடந்த வடக்கு, கிழக்கு மாகாண சபை உட்பட ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் மிக விரைவில் நடைபெறும் என அறிவிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் பரப்புரைச் சூடுகள் ஏற்கனவே நலிந்து, பிளவுபட்டு, கன்னை பிரிந்து, அணி சேர்ந்து, துண்டாடப்பட்டு நிற்கும் தமிழர் தரப்புகளை மேலும் பிரித்து நலிவுற வைத்துவிடுமோ என்ற பேரச்சமும் கூட ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் போராட்ட யுத்தத்தில் – ஆயுதச் சமரில் – தோற்றமையினால் அரசியல் சதுரங்க மேசையில் பேரம் பேசும் வலுவை இழந்து, சர்வதேச ஆதரவுத் தளத்தை மட்டும் பிரதான பின்புலமாக நம்பியிருந்த தமிழினத்துக்கு உரமூட்டும் வகையில் சர்வதேச ஆதரவுத் தளம் விரிவடையவில்லை.

இதேபோன்று, தமக்குள் ஒன்றுபட்டு நின்று தமிழரின் – நாட்டின் – தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயம் செய்யும் தீர்வு ஒன்றைத் தரப்போகின்றவை போல காட்டிக் கொண்டு நான்கு ஆண்டுகளுக்கு முன் ஒன்றுதிரண்ட தென்னிலங்கைத் தரப்புகள் தம் சுயரூபத்தை இப்போது காட்டிவிட்டன.

பதவியை – அதிகாரத்தை – எட்டுவதற்கான ஒன்றிணைவே தவிர, அது தமிழருக்கு நியாயம் செய்யும் ஐக்கியம் அல்ல என்பதை இப்போது ஆட்சியதிகாரத்துக்காகத் தமக்குள் முட்டி, மோதி, பிளவுபட்டு, பிரிந்து நிற்பதன் மூலம் அவை நிரூபித்துள்ளன.

இப்படி உள்நாட்டிலும், சர்வதேச தரப்பிலும் அவநம்பிக்கையான சமிக்ஞைகளை எதிர்கொண்டபடி தைமகளை சுரத்தின்றி மனச்சஞ்சலத்துடன் வரவேற்கின்றனர் தமிழர்கள்.

# ஜனாதிபதியின் பொங்கல் வாழ்த்து



'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என மகாகவி பாரதி பாடியதிலிருந்து தமிழர்கள் உழவுத் தொழிலுக்கு எத்தனை முன்னுரிமை அளித்துள்ளனர் என்பதை உணரக் கூடியதாக இருக்கின்றது. கமத்தைப் பிரதான வாழ்வாதாரமாகக் கொண்ட இயற்கையுடன் இணைந்த வாழ்க்கை முறையையே அவர்கள் கொண்டிருந்தார்கள் என்பதையும் இது புலப்படுத்துகின்றது.

அத்தோடு வாழ்வின் ஆதாரமான விவசாயத்திற்கு நீர், ஒளி, வெப்பம், காற்று ஆகியவற்றை உருவாக்க உதவிவரும் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் முகமாக உலகெங்கும் வாழும் தமிழர்கள் பண்டுதொட்டுகொண்டாடிவரும் தைப்பொங்கல் தினத்திற்கு எனது வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.


பால் பொங்கி வழிவதைப் போல் அனைவரது உள்ளங்களிலும் அன்பும் மகிழ்ச்சியும் பெருகிப் பிரவாகித்து நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே தமிழ் மக்கள், தமது விளைச்சலினால் பெற்றுக்கொண்ட புத்தரிசி மற்றும் தானியங்களோடு தூய பாலும் சர்க்கரையும் கலந்து பொங்கி மகிழ்கின்றனர். பல இன, மத, கலாசார சமூகத்தைக் கொண்ட எமது நாட்டின் கலாசார பன்மைத்துவத்தின் செழுமைக்கு இத்தகைய பண்டிகைகள் சிறந்த வாய்ப்பாக அமைகின்றன என்பதே எனது நம்பிக்கையாகும்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது நமது சகோதர தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வரும் உறுதியான நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கை கைக்கூடும் வகையில் மலர்ந்திருக்கும் இப்புத்தாண்டு அவர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற வழிவகுக்கும் ஆண்டாக அமைய வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான வலிமையான உறவினை மேன்மேலும் மெருகூட்டும் வகையிலும் தமிழ் கலை, கலாசாரத்தினை வெளிப்படுத்தும் வகையிலும் தைத் திருநாளைக் கொண்டாடி மகிழும் இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கும் உலகெங்கிலும் வாழும் தமிழர்களுக்கும் எனது இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**- மைத்திரிபால சிறிசேன**
**இலங்கை ஜனாதிபதி**

# சம்பந்தனின் வாழ்த்துச்செய்தி



இலங்கை வாழ் அனைத்து தமிழ் மக்களுக்கும் எனது இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மனித வாழ்வின் அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்து கொள்வதற்கான இயற்கை வளங்களை அருளும் சூரியபகவானுக்கு நன்றி செலுத்தும் இந்த உழவர் தின திருநாளில், தமது சொந்த நிலங்களில் குடியேற முடியாமலும் குடியேறிய நிலங்களில் பயிர்செய்ய முடியாமலும் உள்ள எமது மக்களின் துயரங்கள் நீங்கவேண்டும் என இறைவனை பிரார்த்திக்கிறேன். மேலும் சமத்துவம் மற்றும் நீதியின் அடிப்படையில் உருவாகும் ஒருநியாயமானஅரசியல்தீர்வின் ஊடாக எம் மக்களின் எதிர்காலம் வளமடைய இந் நன்னாளில் பிரார்த்தனை செய்வோமாக.

எமது மக்களின் நிலங்கள் அதிக விளைச்சலையும் செழிப்பையும் தந்து எம் மக்கள் தன்னிறைவுள்ள சமூகமாக மீண்டெழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

**இரா.சம்பந்தன்**
**தலைவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

# பொங்கும் மங்கலம் எங்கும் நல்குக!

பொங்கும் மங்கலம் எங்கும் நல்குக. பொங்கல் பண்டிகை தமிழர் திருநாளாகும்.

பொங்கல் என்பது அர்ப்பணத்திற்குரிய நன்னாகும்.

இயற்கையுடன் ஒட்டி வாழ்ந்தான் தமிழன் என்பதை பிரதிபலிக்கும் நன்னாளாகும்.

'தை பிறந்தால் வழி பிறக்கும் என்பர்' எம் ஆன்றோர். அது போல் இன்று எம்மை பீடித்திருக்கும் துன்பங்கள் நீங்கி - அனைத்தும் இன்பமாய் மிளிர வேண்டும் என்பதே எமது எண்ணமாகும்.



தை திருநாள் உழவரின் திருநாளாகவே பன்நெடுங்காலமாக கொண்டாடப்பட்டு வருவதை வரலாற்று ரீதியாக அறியக் கிடைக்கிறது.

இதைத் தொடர்ந்து வரும் பட்டிப் பொங்கல் உழவர்கட்கு எல்லா வழியிலும் உதவும் ஆ நிரைகட்கு நன்றி செலுத்தும் திரு நாளாக அமைவு பெறுகின்றது.

பொங்கல் விழா நன்றியின் விழா - இன்று இவ் விழா பரிணமித்துள்ளது.

தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் கொண்டாடப்பட்டு வருவதில் இருந்து இவ் விழாவின் சிறப்பையும், மகிமையையும், வாழ்த்த வேண் டியவராய் உள்ளோம்.

பிறக்கும் இத் தை பொங்கல் விழா சகல சௌபாக்கியம் நிறைந்த பொங்கலாக அமையட்டும், வீடு சிறக்க, நாடு சிறக்க உலகில் அன்பும், சமாதானமும் நிலவ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**இம்மானுவல் ஆனல்ட்**
**முதல்வர், யாழ் மாநகர சபை.**

# தமிழருக்கு இந்தப் பொங்கலாவது மகிழ்ச்சி தருமா?



தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். தமிழர்கள் வாழ்வில் தை பிறந்தாலும் வழிகள் பிறப்பதாக இல்லை. புதிய அரசமைப்பு வரைவும் தமிழர்களின் தீர்வுக்கு வழி பிறக்கச் செய்யும் அரசியல் சூழல் தற்போதிருப்பதாகத் தெரியவில்லை என்று ஈ.பி.டி.பி. யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவரின் செய்தியில் -

போர் ஏற்படுத்திய வடுக்களும், பொருளாதாரச் சுமையுமாக வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கை வறுமையின் பிடியில் சிக்குண்டு கிடக்கின்றது. பொருளாதார ரீதியாக தமிழர்களின் வாழ்க்கையை உயர்த்திவிட உழைக்காதவர்கள், தொழில் வாய்ப்புகள் வேண்டாம், அபிவிருத்தி வேண்டாம், என்றும் பொங்கலுக்குத் தீர்வு, தீபாவளிக்குத் தீர்வு என்றும் கூறிக்கொண்டு காலத்தை விரயமாக்கிக் கொண்டு இருக்கின்றார்கள்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிராகரித்து ஒருமித்த நாடு என்ற ஒற்றையாட்சிக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை சட்ட ரீதியாக வலுவிழக்கச் செய்யவே முயற்சிக்கின்றார்கள். (10 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

**16.01.2019**
**புதன்கிழமை**
நட்சத்திரம் : பரணி மு.ப 10.30 வரை
திதி : தசமி மு.இ 07.53 வரை
**சுபநேரம் : 05.04 - 06.34 வரை**
**இராகுகாலம் : 12.34 - 02.04 வரை**
**கார்த்திகை விரதம்**

## வெளிநாட்டவர்கள் இருவர் கடலில் மூழ்கி உயிரிழப்பு

நாட்டின் இருவேறு பகுதிகளில் வெளிநாட்டவர்கள் இருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

வென்னப்புவ மற்றும் மாத்தறை ஆகிய இரு வேறு பகுதிகளில் இவ்வாறு இருவர் உயிரிழந்துள் ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. வென்னப்புவ, வேளாங்கண்ணி ஆலயத்திற்கு அருகில் உள்ள கடற்பகுதியில் நீராடச் சென்ற வெளிநாட்டவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

28 வயதுடைய ஜேர்மன் நாட் டவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

அத்துடன் மாத்தறை, மடிஹ பகுதியில் அலையில் விளையாடிக் கொண்டிருந்த வெளிநாட்டவர் ஒருவர் அலை இழுத்துச் சென்ற போது கடலில் மூழ்கி உயிரிழந்துள் ளார்.

36 வயதுடைய பிரிட்டன் நாட் டவர் ஒருவரே உயிரிழந்துள்ளார். இந்த இரு சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மேல் மாகாணத்தில் 100 நாள் திட்டம்

## ஆளுநர் அஸாத் சாலி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 15

மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் 100 நாள் துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக மேல் மாகாண ஆளுநர் அஸாத் சாலி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரதும் அனைத்து அமைச்சர்களினதும் ஒத்துழைப்புடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மேல் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆளணி மற்றும் பௌதீக வளக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு மத்திய மற்றும் மாகாண கல்வி அமைச்சுக்களின் மூலம் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



சுத்தம், சுகாதாரம், போதைப் பொருள் பாவனையற்றதும் சிறந்த போக்குவரத்து ஒழுங்கு விதிகளைப் பேணும் வகையிலும் மேல்மாகாணத்தை துரிதமாக கட்டியெழுப்புவதுடன் இதற்கு பொது மக்களின் ஒத்துழைப்புப் பெற்றுக் கொள்ளப்படும்.

உள்நாட்டு - வெளிநாட்டு விசேட உதவிகளையும் பெற்று எட்டு மாகாணங்களுடனும் ஒன்றிணைந்து பணிகளை முன்னெடுக்கவுள்ளோம்.

தமிழ் பேசும் மக்களுக்கு கடந்த காலங்களில் இடம் பெற்ற அவலங்கள் இனியும் தொடர இடமளிக்கப் போவதில்லை. தமது குறைகளை பொது மக்கள் எந்த வேளையிலும் என்னைச் சந்தித்து முறையிட்டு அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்-என்றார். (ஐ)

## ஏழாலை தெற்கு, களபாவோடை வசந்த நாகபூசனி அம்மன் சனியன்று தேரில் உலா

ஏழாலை, ஜன. 15

ஏழாலைதெற்கு வசந்தபுரம் களபாவோடை அருள்மிகு வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தான மகோற்சவம், கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பக்திபூர்வமாக நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். உற்சவத்தில், நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சப்பறமும் 19 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் -

மறுநாள் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தைப் பூரணை முற்பகல் 10 மணிக்கு, 'ஸ்ரீ வசந்த நாக புஷ்கரணி' தீர்த்தத் தடாகத் தில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

தினமும் காலை 9 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகும். (இ)

# சம்பந்தனுக்காக வீட்டையே விட்டுக்கொடுக்கும் மஹிந்த!

கொழும்பு, ஜன. 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பிக்காக, எதிர்க் கட்சித் தலைவருக்குரிய உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டுக்கொடுக்க மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கூட்டரசிலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெளியேறியதாலும், சூழ்ச்சி அரசு கவிழ்க்கப்பட்டதாலும் நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாகச் செயற்படவேண்டிய நிலை அந்தக் கூட்டமைப்புக்கு ஏற்பட்டது.

இதையடுத்து எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்த நியமிக்கப்பட்டார். நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள அலுவலகமும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

எனினும், எதிர்க்கட்சித் தலைவருக்குரிய வீடு இன்னும் கையளிக்கப்படவில்லை. இது தொடர்பில் தனது முகநூலில் பதிவிட்டுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவர்,

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடக்குமா இல்லையா? என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கேட்டேன்.

இப்போதைக்கு நடக்கும் வாய்ப்பில்லை என்றார்.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு நீங்கள் போகப்போவதாகச் செய்திகள் வந்துள்ளனவே. எப்போது போகிறீர்கள் ? என்றேன்.

இல்லை-நான் அங்கு போக மாட்டேன்- சம்பந்தன் அதில் இருக்கட்டும். அரசியல் வேறு தனிப்பட்ட வாழ்க்கை



வேறு. அவர் வயது முதிர்ந்தவர். முன்னர் இருந்த வீட்டில் மாடி ஏறச் சிரமப்படுகிறார் என்றுதான் அந்த வீடு கொடுக்கப்பட்டது. அதில் அவர் இருக்கட்டும் என்றார் மஹிந்த. (ஐ)

## புதுவருடம் புதுவாழ்வு; வேலணையில் கருத்தரங்கு

வேலணை, ஜன. 15

2019 ஆம் ஆண்டுக்கான பிரதேச ரீதியான கருத்தரங்கு தொடரில் (01) நாளை மறுதினம் வியாழன் காலை 9.30 மணி முதல் 1.30 மணிவரை வேலணை மகளிர் அபிவிருத்தி நிலைய அலுவலக மண்டபத்தில் "புதுவருடம் புதுவாழ்வு" என்ற தலைப்பில் கருத்தரங்கு இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவசந்திரன், வேலணை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி. சந்திரகுமார் சங்கீதா, திருமதி விஜயதீபன் பிரியா, வேலணை வைத்தியசாலையின் வைத்தியர் தினேஸ் குமார் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (இ)

# அலரி மாளிகையில் பொங்கல்







கொழும்பு, ஜன. 15

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் மாலை தேசிய தைப்பொங்கல் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

இந்த நிகழ்வைப் பிரமர் அலுவலகமும், தேசிய நல்லிணக்கம், அரச கருமமொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சும் இணைந்து நடத்தியிருந்தன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டிருந்தார். இதன்போது பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

இதில் மத குருமார்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், அமைச்சர் மனோ கணேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

## தைத் திருநாளையொட்டி நல்லூரில் புதன் காலை சைக்கிள் ஓட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 15

தமிழர் பெருநாள் திருநாளை முன்னிட்டு 'Tube தமிழ்' நடத்தும் மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி, நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு, நல்லூர் கந்தன் ஆலய முன்றலில் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சைக்கிள் ஓட்டப்போட்டி நல்லூரில் ஆரம்பமாகி கிளிநொச்சி டிப்போ சந்திவரை சென்று மீண்டும் திரும்பி யாழ்ப்பாணம் மாம்பழச் சந்தியில் முடிவடையும் என்றும் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் போட்டியில் பங்குபற்றலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது. (இ)

# திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 15

திருமறைக் கலாமன்றம் ஆண்டு தோறும் நடத்தும் 'பொங்கல் விழா' சிலகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் மாலை கலைநிகழ்ச்சிகளுடன் இம் முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிக்கு யாழ்.திருமறைக் கலாமன்றப் பணியகத்தில் பொங்கல் வைபவமும் அதனைத் தொடர்ந்து காலை 07.00 மணிக்கு இல.17, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைஞானசுரபியான இல்லத்தில் பண்பாட்டு வழிபாடும் இடம்பெறும்.

தொடர்ந்து மாலை 6.00 மணிக்கு இல.238, பிரதானவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் கலைநிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் செந்தமிழ்சொல்லருவி ச.லலீசன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கலை நிகழ்ச்சிகளாக திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகள் வழங்கும் வரவேற்பு நடனமும், திருமறைக் கலாமன்ற கலைஞர்கள் வழங்கும் கூத்துப்பண் இசையும் இடம்பெறும். தொடர்ந்து மூத்த கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் 'நேற்றைத் துயரங்கள் நீறாகப் பொங்குது பால்' என்னும் பொருளில் கவியரங்கு இடம்பெறும்.

இதில் கவிஞர்களான த.ஜெயசீலன், கு.றஜீபன், ம.ஜொணி, வ.வடிவழகையன் ஆகியோர் பங்குபற்றுவார்கள்.

தொடர்ந்து நிறைவு நிகழ்வாக இளவாலைத் திருமறைக் கலாமன்றம் வழங்கும் சோழன் மகன் தென்மோடி நாட்டுக்கூத்து இடம்பெறும்.

இந்நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)

# இலங்கை கடற்படையின் அத்துமீறல்களை இந்திய அரசாங்கம் கண்டிக்காதது ஏன்?

## கேட்கிறார் ராமதாஸ்



இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 27 தமிழக மீனவர்களையும் அவர்களின் படகுகளுடன் விடுவித்து சொந்த ஊர் அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக ராமதாஸ் நேற்று (திங்கட்கிழமை) வெளியிட்ட அறிக்கையில்,

வங்கக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற ராமேஸ்வரம் மற்றும் ஜெகதாப்பட்டினம் பகுதி மீனவர்கள் 27 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். மற்றொரு குழு மீனவர்களின் படகையும் தாக்கி சேதப்படுத்தியுள்ளது. இதில் மாயமான ஒரு மீனவரின் நிலை என்ன? என்பது இதுவரை தெரியவில்லை.

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 9 பேர் இரு படகுகளில் சனிக்கிழமையன்று வங்கக் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். நெடுந்தீவு அருகில் அவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, அங்கு வந்த இலங்கை கடற்படையினர், தமிழக மீனவர்கள் 9 பேரையும் கைது செய்தனர். அவர்களின் இருபடகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. அதேபோல், கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 11 பேரும் அவர்களின் படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழர்கள் மற்றும் தமிழக மீனவர்கள் மீதான வெறுப்பு இலங்கை அரசு மற்றும் சிங்களக் கடற்படையினரின் மனங்களிலிருந்து அகலவில்லை என்பதை சனிக்கிழமை இரவு நிகழ்ந்த தாக்குதல் மற்றும் கைது நிகழ்வு உறுதி செய்துள்ளது. தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல் இன்றோ, நேற்றோ நடக்கும் நிகழ்வு அல்ல.

கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழக மீனவர்களை கைது செய்வது, சுட்டுக்கொல்வது, தாக்குதல் நடத்துவது, கடலில் தள்ளிவிடுவது என இலங்கை கடற்படையினரின் அத்துமீறல்களும், மனித உரிமை மீறல்களும் தொடர்ந்து கொண்டு தான் உள்ளன.

இதுதொடர்பாக இரு நாடுகளுக்குமிடையே பல உடன்பாடுகள் செய்து கொள்ளப்பட்ட போதிலும் கூட சாதகமான எந்த மாற்றமும் நிகழவில்லை. மாறாக, கடந்த சில ஆண்டுகளாக தமிழக மீனவர்களுக்கு எதிராக இலங்கை அரசின் நடவடிக்கைகள் கடுமையாகியுள்ளன.

கடந்த 3 ஆண்டுகளாக தமிழக மீனவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட படகுகளை திருப்பித் தர இலங்கை அரசு மறுத்து வருகிறது. அத்துடன் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டால், கண்டிப்பாக 3 மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டது.

இலங்கை அரசின் இந்த அத்துமீறல்கள் எதையும் இந்தியா கண்டிக்காதது தான் இலங்கைக்கு அதீத துணிச்சலைத் தந்துள்ளது. உலகில் வேறு எந்த நாட்டிலும் அண்டை நாட்டு மீனவர்கள் மீது வன்மத்துடன் தாக்குதல் நடத்தப்படுவதில்லை. இந்திய எல்லைக்குள் மீன்பிடிக்க வரும் இலங்கை மீனவர்கள் கூட கண்ணியத்துடன் தான் நடத்தப்படுகின்றனர்.

ஆனால், இலங்கை அரசு மட்டும் தான் தமிழக மீனவர்களை தாக்குவது, கைது செய்தால் உடனடியாக விடுதலை செய்யாமல் 3 மாதங்கள் வரை சிறையில் அடைத்து வைப்பது, லட்சக்கணக்கிலும், கோடிக்கணக்கிலும் அபராதம் விதிப்பது, பறிமுதல் செய்த படகுகளை திருப்பித் தர மறுப்பது உள்ளிட்ட கொடுமைகளை இழைத்து வருகிறது. இந்தியாவிடம் ஏராளமான உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் இலங்கை அரசு, இந்திய எல்லைக்குள் நுழைந்து தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது இந்தியாவின் இறையாண்மைக்கு சவால் விடுக்கும் செயல் என்பதில் சந்தேகமேயில்லை.

இலங்கையின் இத்தகைய அத்துமீறல்களை இந்தியா இன்னும் எவ்வளவு நாளைக்கு அனுமதிக்கப் போகிறது? இலங்கை கடற்படையினரின் அத்துமீறல்கள் நீடித்தால், தூத்துக்குடி முதல் நாகப்பட்டினம் வரையிலான கிழக்குக் கடற்கரையோர மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல முடியாமல் வாழ்வாதாரத்தை இழந்து நிற்க நேரிடும். எனவே, உடனடியாக கைது செய்யப்பட்ட 27 மீனவர்களையும் அவர்களின் படகுகளுடன் விடுவித்து சொந்த ஊர் அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும்;

அத்துடன் மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கண்டு, தமிழகம் மற்றும் இலங்கை மீனவர்கள் இரு தரப்பு கடல் பகுதிகளில் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் மீன் பிடிக்கும் வகை செய்ய வேண்டும் என ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

# சபரிமலை விவகாரத்தில் ராகுல் அடித்தார் ‘ பல்டி’

சபரிமலை விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை வரவேற்ற காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி இப்போது இருதரப்பு கருத்திலும் நியாயம் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் 10 முதல் 50 வயது வரையிலான பெண்களை தரிசனத்திற்கு அனுமதிப்பதில்லை.

இளம்பெண்களை தரிசனத்திற்கு அனுமதிக்காமல் இருப்பது கோவில் ஆச்சாரம். அதை மீறக்கூடாது என்று ஐயப்ப பக்தர்களும், பந்தளம் ராஜகுடும்பம், கோவில் தந்திரிகளும் கூறி வந்தனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து உச்ச நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் அனைத்து வயது பெண்களையும் சபரி மலை ஐயப்பனை தரிசிக்க அனுமதிக்க வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி வரவேற்பு தெரிவித்தார். அதே நேரம் கேரள மாநில காங்கிரஸார் இத்தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையில் ராகுல் காந்தி கடந்த 2 நாள்களாக துபாய் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அங்கு வாழும் கேரள மக்களை சந்தித்து கலந்துரையாடினார். அதன்பிறகு அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில்

சபரிமலை விவகார தீர்ப்புக்கு ஆதரவான கருத்தையும், எதிர்ப்பான கருத்தையும் அறிந்து கொண்டேன். இரு தரப்பினரும் கூறுவதில் நியாயம் இருக்கிறது.

ஒருபிரிவினர் கோவிலின் ஆச்சாரத்தை ஒரு போதும் மீறக்கூடாது என்கிறார்கள். இன்னொரு பிரிவினர் அனைத்து வயது பெண்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்று கூறுகிறார்கள்.

பெண்களுக்கு சமத்துவமும், சம உரிமையும் வழங்கப்பட வேண்டும் என்பதில் எனக்கு மாற்றுக்கருத்து இல்லை. அதே நேரம் கோவிலின் ஆச்சாரங்களை மீறக்கூடாது என்பதிலும் நியாயம் இருக்கிறது.

எனவே இந்த விவகாரத்தில் இன்னும் குழப்பமான சூழ்நிலையே நிலவுகிறது. என்ன நேர்ந்தாலும் காங்கிரஸ் கட்சி கேரள மக்களின் உணர்வுகளுக்கு, விருப்பத்திற்கு மாறாக செயல்படாது. மக்கள் என்ன விரும்புகிறார்களோ அதன்படி தான் செயல்பட வேண்டும் என்று கேரளமாநில காங்கிரஸ் தலைவர்களுக்கு அறிவுறுத்தி உள்ளேன். அதே நேரம் தீர்ப்பு குறித்து கருத்து எதுவும் கூற விரும்பவில்லை. – என்றார்.

## தனியார்துறையில் பாலியல் தொல்லை; 169 முறைப்பாடுகள் அனுப்பி வைப்பு

அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு ஏற்படும் பாலியல் தொல்லை குறித்து ‘சீ பாக்ஸ்’ என்ற இணையத்தள முகவரியில் புகார் தெரிவித்து வருகின்றனர். இதில், 2017 ஆம் ஆண்டு முதல் இதுவரை 169 பாலியல் தொல்லை புகார்களை தனியார் துறைகளில் பணிபுரியும் பெண்கள் அனுப்பி உள்ளனர்.

மராட்டிய மாநிலத்தில் இருந்து அதிகபட்சமாக 33 புகார்களும், டில்லியில் இருந்து 23 புகார்களும் பதிவாகி இருப்பதாக பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம் தெரிவித்து உள்ளது. அதேபோல் அரசு துறைகளில் இருந்தும் புகார்கள் வந்து இருக்கின்றன. நிதித்துறையில் இருந்து 21 புகார்களும், தகவல் தொடர்பு துறையில் இருந்து 16 புகார்களும் வந்துள்ளன. இந்த புகார்கள் மீது சம்பந்தப்பட்ட மத்திய மற்றும் மாநில அரசு அதிகாரிகளுக்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டு உள்ளதாக மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

# முதல்வர் குமாரசாமியின் ஆட்சி கர்நாடகாவில் ஆட்டம் காணுமா?

பெங்களூர்,ஜன.15

கர்நாடகாவில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 12 எம்.எல்.ஏக்கள் பா.ஜ.க.வுக்கு தாவ இருப்பதாக வெளியான தகவலை அடுத்து முதல்வர் குமாரசாமி தலைமையிலான ஆட்சி ஆட்டம் காணுமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் நடைபெற்று முடிந்த கர்நாடக மாநில சட்டமன்ற தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் போட்டியிட்டு வெறும் 37 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்ற மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சி, காங்கிரஸ் ஆதரவுடன் ஆட்சி அமைத்தது. முதல்வராக குமாரசாமி பதவியேற்றார்.

இந்த நிலையில் 104 தொகுதிகளில் வென்ற பாஜக, எப்போது வேண்டுமானாலும் குமாரசாமியின் ஆட்சியை கவிழ்த்து ஆட்சியைப் பிடிக்க முயற்சிப்பதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்து வந்தனர்.




இந்த நிலையில் தற்போது கிடைத்துள்ள செய்தியின்படி காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் 12 பேர் பாஜகவுக்கு தாவவிருப்பதாகவும் இதனால் குமாரசாமி தலைமையிலான ஆட்சிக்கு ஆபத்து என்றும் கூறப்படுகிறது.

ஏற்கனவே காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் பலகோடி ரூபாய்க்கு விலை பேசப்படுவதாக காங்கிரஸ் கட்சியின் தலைமை குற்றஞ்சாட்டி வந்த நிலையில் தற்போது வந்துள்ள இந்த தகவலால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# எத்தனை கூட்டணிகள் அமைத்தாலும் மத்தியில் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும்

## அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி நம்பிக்கை



புதுடில்லி,ஜன.15

எத்தனை கூட்டணிகள் அமைந்தாலும் மத்தியில் பா.ஜனதா மீண்டும் ஆட்சி அமைக்கும் என அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் கூறுகையில்,

நடைபெற இருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் உத்தரபிரதேச மாநிலத்தில் பாரதீய ஜனதா சிறப்பான வெற்றியைப் பெறும் என்றும், எத்தனை கூட்டணிகள் அமைந்தாலும் மத்தியில் தங்கள் கட்சி மீண்டும் ஆட்சி அமைக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

தனித்து நின்று பாரதீய ஜனதாவை எதிர்க்க முடியாது என்பதாலேயே சமாஜ்வாதியும், பகுஜன் சமாஜ் கட்சியும் கூட்டணி அமைத்து இருப்பதாகவும் அவர் கூறினார்.

# தைப்பொங்கல் திருநாள் சிறப்புமலர்



## அருளாசிச் செய்தி



இன்று தைப்பொங்கல் திருநாள். இது தமிழர்கள் சூரியனுக்கு நன்றி செலுத்தி மகிழும் பொன்னான திருநாள் ஆகும். அதாவது சீனி, தேன், சர்க்கரை, கஜு முந்திரியைப் பருப்பு, பால், நெய் ஆகியவற்றை அளவாகச் சேர்த்துப் பொங்கிப் படைத்து மகிழ்கின்ற ஓர் அருமையான நன்னாள்.

இந்தத் தைப்பொங்கல் ஒரு சிறப்பான நல்ல பண்டிகையாகும். இனியாவது இலங்கை வாழ் மக்கள் அனைவரும் ஆனந்த கோலாகல சிறப்பான நல்வாழ்வில் திளைத்திருக்க அருளாசிகள் நல்கி நல்லைக்குருமணியின் பாதம் பணிந்து வாழ்த்துக்கின்றோம்.

இனிப்பான நல்ல பொங்கல்போல நமது வாழ்க்கையும் சிறப்பாக இனிக்க வேண்டும் என்று ஆசி வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

தை பிறந்தால் வழி பறிக்கும் என்பார்கள். ஆகவே நல் வாழ்வில் மங்கலமும் சுபீட்சமும் பல்கிப் பெருக திருவருள் புரிய வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஆதீன குரு முதல்வர்**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.**

## நோக்கம் சரியானால் ஆக்கம் தானே வரும்



பொங்கல் விழா அன்பையும் பாசத்தையும் தர்மத்தையும்வளர்க்கும்விழா. நாம் எந்த தர்மம் செய்தாலும் கொடுப்பதை அன்போடு கொடுக்க வேண்டும். ஒருவருக்கு தண்ணீர் கொடுப்பதைக் கூட அன்போடு கொடுத்தால் குடிப்பவர் தாகம் தணிந்ததும் அவருடைய நன்றி மிகுந்த பார்வை கொடுத்தவருக்கு மனநிறைவைத் தருகிறது. அன்பாகப் பேசிக் கொண்டே பரிமாறும்பொழுது சாப்பிடுபவர் அன்பின் மிகுதியால் இரட்டிப்பு உணவு உட்கொள்வதும் நாம் நடைமுறையில் பார்க்கலாம்.

இயற்கை தன்னுடைய கடமைகளை தவறாமல் செய்கிறது. ஆனால் இயற்கையை வணங்காமல் இயற்கையின் சமநிலையை அழிக்கும் விதமான காரியங்கள் தொடர்ந்து செய்யப்பட்டு வரும்பொழுது இயற்கை அன்னையின் சீற்றம் வெளிப்படுகின்றது. புயலாகவும் நெருப்பாகவும் பூமி அதிர்வாகவும் இந்த வெளிப்பாடு உள்ளது.

நோக்கத்தை நல்வழிப்படுத்தும் ஆற்றல் மனதிற்கு உண்டு. மௌனம் கடைப்பிடிக்க மனம் ஒடுங்கும் அடங்கும் மனத்திற்கு என்றுமே அமைதியும் மதிப்பும் உண்டு. இத்தகைய அமைதியையும் பிறர் மதிப்பினைப் பெறும்படியான உயர் நிலையையும் இந்தப் பொங்கல் திருநாளில் பெற்றிட அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

'சர்வோ ஜனகா சுகினோ பவந்து'

**சிவஸ்ரீ சோமசுந்தர**
**தண்டபாணிகதேசிகர்.**
**பிரமகுரு, வல்லை ஸ்ரீ முத்துமாரி**
**அம்மன் தேவஸ்தானம்.**

## தூதுபோ தைமகளே!

வாழை தோரணம் நாலு பக்கம் கட்டி
வாசலிலே வண்ணக் கோலமு மிட்டு
பாலும் சர்க்கரை பயற்றுடன் அரிசியும்
பலகாரம் இனிப்பு கரும்பு வகைகளும்
பானையில் இட்டு அடுப்பினில் வைத்து
காலைக் கதிரவன் வரவினைக் கண்டு
சூழும் தீமைகள் பொங்கி வழிந்து
நாளும் நன்மை தங்கிடப் பொங்குவோம்!

அநீதிகள் அகன்று நீதி தழைத்திட
அராஜகம் அழிந்து அன்;பு பெருகிட
வேதங்கள் மறைந்து பெருவாழ்வு உயர்ந்திட
நாதி இல்லார்க்கு நல்லமைதி கிடைத்திட
சூதுபோல் ஏமாற்றும் அரசுகள் அகன்றிட
மேதினி வாழ்விலே மனிதத்தை மதித்திட
யாதுமாய் நின்றெமைக் காக்கும் கடவுளிடம்
தூதுபோ தைமகளே பொங்கி
வரவேற்கின்றோம்.

**உயிலூர் திருமதி. ஆன்றிலோ சுபாகரன்**
**மன்னார்.**

## அனைவரும் ஏற்கும் நியாயமான தீர்வு அமையட்டும்

**பொங்கல் தின வாழ்த்துச் செய்தியில் யாழ் ஆயர்**



தமிழ் மக்களின் நன்றிப் பெரு விழாவான பொங்கல் விழா உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் மக்களால் கொண்டாடப்படும் வேளை இவ்விழாவை கொண்டாடும் அனைவருக்கும் நீங்கள் எங்கிருந்தாலும் 2019ஆம் ஆண்டிற்குரிய பொங்கல் தின விழா வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

பொங்கல் விழா நன்றியின் விழா. நம்மை என்றும் நன்றி கூறிக்கொண்டே இருக்க அழைப்பு விடுக்கும் விழா. நம்மைத் தாங்கும் நிலம் நமக்குத் தருகின்ற அனைத்து பயன்களுக்கும் நன்றி சொல்லும் விழா. முதல் விளைச்சலை இறைவனுக்கும் இயற்கைக்கும் காணிக்கையாக்கும் விழா.

பொங்குக நன்றியால் பொங்குக - இறைவன் அளித்த தரையை எண்ணி - தரையளித்த விளைவை எண்ணி - பொங்குக நன்றியால் பொங்குக என இந்த விழாவை மகிழ்வோடு கொண்டாடுவோம்.

இலங்கை நாடு 1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது முதல் இன்றுரை இங்கு வாழ்கின்ற மூன்று இன மக்களும் சங்கிலித் தொடராக இன மோதல்களையும்; அதன் உச்சக்கட்டமாக மூன்று தசாப்தகால போர் அனுபவங்களையுமே பெற்றுள்ளார்கள். போர் முடிந்து 10 ஆண்டுகளாகியும் இன்னும் நீதியோடு கூடிய நிரந்தர தீர்வு ஏற்படவில்லை என்பது வேதனையானது.

அரசியல் தீர்வுக்கு அடித்தளமாக பார்க்கப்படும் புதிய அரசமைப்பு சுதந்திர தினத்திற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இது பற்றி பலரும் பலவிதமான சாதக பாதக கருத்துக்களை தெரிவிக்கின்றனர். இனவாத சிந்தனையை தூண்டாது கடந்த கால வரலாற்றை மனதிற் கொண்டு இலங்கை வாழ் மக்கள் என்ற சிந்தனையுடன் செயற்படும்படி பாதக கருத்துக்களை தெரிவிப்போருக்கு அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

இலங்கையில் நிலவும் நீண்டகால இனப்பிரச்சினைக்கு இந்த ஆண்டு தீர்வு கண்டே ஆகவேண்டும். பிளவுபடாத இலங்கை நாட்டுக்குள் சிங்கள தமிழ் முஸ்லிம் என்ற மூவின மக்களும் ஏற்கும் விதமாக இது அமைய வேண்டும்.

அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்ட மாற்றப்பட முடியாத நீதியோடு கூடிய நிரந்தர அதிகாரப் பகிர்வை இந்த அரசு வழங்க வேண்டும். எல்லா தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நியாயமானதாக இது அமைய வேண்டும்.

இது போன்ற ஒரு சந்தர்ப்பம் இனி ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் இந்த இறுதிச் சந்தர்ப்பத்தை இலங்கை நாட்டை உண்மையாகவே நேசிக்கும் சிங்கள தமிழ் முஸ்லிம் தலைவர்கள் அனைவரும் தக்க முறையில் பயன்படுத்த வேண்டும் என இலங்கை வாழ் அனைத்து மக்கள் பெயராலும் அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

வடமாகான புதிய ஆளுநராக நியமிக்கப்பட்ட தமிழரான கலாநிதி சுரேன் இராகவன் அவர்களை அன்புடன் மகிழ்வோடு வரவேற்கிறோம். இவ்வாண்டில் நடக்கப் போகும் விடயங்களை நம்பிக்கையோடும் இறையாசீருடனும் வரவேற்க வாழ்த்துகிறோம்.

**மேதகு கலாநிதி யஸ்ரீன் பேனாட் ஞானப்பிரகாசம்**
**ஆண்டகை,**
**யாழ் ஆயர்**

## வாழ்த்தி நின்று பொங்கிடுவோம் !

**மனங்கவரும் மார்கழியில்**
**மகத்தான நாட்கள்வரும்**
**இந்துக்கள் கிறீத்தவர்கள்**
**எல்லோரும் பங்குகொள்வர்**
**வைஷ்ணவமும் சைவமும்**
**வாழ்த்திநிற்கும் திருவெம்பா**
**மார்கழியின் முக்கியமாய்**
**மனமாசை அகற்றிநிற்கும் !**

**ஒளிவிழா எனும்பெயரால்**
**உத்தமராம் யேசுபிரான்**
**வழிநிற்போர் அனைவருமே**
**வாழ்த்துக்கூறி நிற்பார்கள்**
**பீடுடைய மாதமாய்**
**மார்கழியும் அமைந்துதுநின்று**
**பெருமகிழ்ச்சி வருவதற்கு**
**தைதனக்கு வழிகொடுக்கும் !**

**தைபிறந்தால் வழிபிறக்கும்**
**என்கின்ற நம்பிக்கை**
**தளர்வுநிலை அகன்றுவிட**
**தானுரமாய் அமைந்திருக்கு**
**பொங்கலென்னும் மங்கலத்தை**
**பொறுப்புடனே தருகின்ற**
**எங்கள்தையை எல்லோரும்**
**இன்பமுடன் வரவேற்போம் !**

**புலம்பெயர்ந்த நாட்டினிலும்**
**பொங்கலுக்குப் பஞ்சமில்லை**
**நிலம்பெயர்ந்து வந்தாலும்**
**நீங்கவில்லை பண்பாடு**
**நலந்திகழ வேண்டுமென்று**
**யாவருமே நினைத்தபடி**
**உளம்மகிழப் பொங்கலிட்டு**
**உவகையுடன் இருந்திடுவோம் !**

**வாசலிலே தோரணங்கள்**
**வடிவாகக் கட்டிடுவோம்**
**வண்ணப் பொடிகொண்டு**
**கோலங்கள் போட்டிடுவோம்**
**எண்ணமெலாம் இறைநினைவாய்**
**எல்லோரும் இருந்திடுவோம்**
**எங்கள்வாழ்வு விடிவுபெற**
**இணைந்து நின்றுபொங்கிடுவோம்!**

**நிலமெங்கும் சமாதானம்**
**நிலைக்கவென்று பொங்கிடுவோம்**
**வளம்கொளிக்க வேண்டுமென்று**
**வாழ்த்திநின்று பொங்கிடுவோம்**
**இளம்மனசில் இறையெண்ணம்**
**எழுகவென்று பொங்கிடுவோம்**
**எல்லோர்க்கும் நல்வாழ்வு**
**இருக்கவென்று பொங்கிடுவோம்.**

எம் . ஜெயராமசர்மா
மெல்பேண், ஆஸ்திரேலியா

## வாழ்வு வந்ததென பொங்கலிடு தமிழா!

**விடிந்தது இந்த உலகம்**
**முடிந்தது வாழ்வின் துயரம்**
**வந்தது புது வாழ்வென**
**பூதலமே பொங்கவிடு!**
**விசும்பின் வழியதாக**
**வீசும் காற்றாகி பறக்கும்**
**பூமித்தாயே தாய் நிலமே**
**ஆய உரிமைக்காக பொங்குக!**

**நில்லாது சுழலும் பிரபஞ்சம்**
**நிறைந்திருப்பதோ பஞ்சபூதம்!**
**நில்லா உலகில் எங்களது**
**அல்லல் தீருமாசையுடன் பொங்குது**
**எண்ணமெலாம்! எண்ணமே வாழ்வாம்**
**எல்லா எண்ணமும் வாழாதாம்!**
**உள்ள உள்ள இனிக்குமுலக வாழ்வு**
**உள்ள வரை தேற்று பொங்கலிட்டு...!**

**தமிழுனுக்குரியது பொங்கல் அது**
**தரணியில் வாழும் சைவ மரபு**
**வழிசைபட வாழ்ந்த பொங்கல்**
**தாழிசை சேரும் இந்து பொங்கல்**
**மேழி பிடித்தான் செயும் சூரிய பொங்கல்**
**தாழி உடையாது தரணி பொங்குக!**
**ஆழி சூழ் உலகில் ஆத்தாளும் அப்பனும்**
**பொங்கலிட; ஊர் வாழும்.**

**மண்டைதீவு மகிழ்நன்**
**கையன்னா பேரின்பநாயகம்**




# தைப்பொங்கல் திருநாள் சிறப்புமலர்

## தைத்திருநாள்! தமிழரின் புத்தாண்டு!!



தை பிறந்துவிட்டால்தமிழ்ப் புத்தாண்டு மலர்ந்து விடும்.

தமிழ்ப் புத்தாண்டு என்பதுதைப்பொங்கல் என்று கொண்டாடப்படும் தைப்பிறப்பா அல்லது சித்திரை வருடப்பிறப்பு என்று சொல்கிறோமே அதுவா என்கின்ற மயக்கம் இன்னும் தமிழ்மக்களிடையே இருக்கிறது. சரிவரத் தெரியாத மக்களிடம் இருப்பது மயக்கம். சரியெதுவெனத் தெரிந்த தமிழர்கள்கூட சரியானதைப் பின்பற்றாமல் விடுவதற்குக் காரணம் வழக்கம். அதனை மாற்றுவதா என்கின்ற தயக்கம்.

இத்தனைக்கும் சித்திரையைப் புத்தாண்டாகக் கொள்ளுகின்ற வழக்கம் தமிழர்களிடையே தொன்றுதொட்டு இருந்துவந்த தொன்றல்ல. பண்டைத் தமிழகத்திலே இருந்த பண்பாடுமல்ல. தொன்மைமிகு சைவசமயத்தோடு தோன்றியதும் அல்ல. ஆரியர்களால் அறிமுகப் படுத்தப்பட்டு இடைக்காலத்தில் நம்மை இறுகப் பற்றிக்கொண்ட எண்ணற்ற மூடநம்பிக்கைகளைப் போலவே, ஏற்பட்டுவிட்ட ஒரு பழக்கம் இது.

பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னரே, சொல்லாலும் பொருளாலும் சுவை மிகுந்த இலக்கியங்களைக் கொண்டிருந்த செந்தமிழ் மொழியைப் பேசிய மக்கள் ஈடு இணையற்ற பண்பாட்டுக்குச் சொந்தக்காரர்களாயிருந்தார்கள். அவர்கள், அறிவியல் முதிர்ச்சியால் அகிலத்திற்கே வழிகாட்டியவர்கள், விண்ணையும், மண்ணையும் ஆராய்ந்து வியப்புமிக்க நூல்களை ஆக்கியவர்கள், வானிலைக் கணக்கீட்டு வல்லமையால் கோள்களின் அசைவுகளைக் குறியீடு செய்தவர்கள். நட்சத்திரங்களையும் அவற்றின் நடமாட்டங்களையும் அவற்றின் பலாபலன்களையும் மிகத் துல்லியமாக ஆராய்ந்து கணித்தவர்கள். உலகுக்குப் பயன்தரும் முடிவுகளை அளித்தவர்கள். அவர்கள்தான், கதிரவனின் ஒளியினால்தான் பயிர்கள் வளர்கின்றன என்றும், காய்க்கின்றன என்றும் கண்டுபிடித்தவர்கள்.

அதனால்தான் களனி விளைந்து கதிரைப் பறித்ததும் தமது புத்தாண்டுப் பிறப்பன்றே முதன் முதலில் அந்தக் கதிரவனுக்கு நன்றி செலுத்தினார்கள். புதுப் பானையில் பொங்கலிட்டுப் படைத்து வணங்கினார்கள். சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூறில் பொங்கல் பற்றிய குறிப்பொன்று காணப்படுகின்றது.

**சாந்த விறகின் உவித்த புன்கம்**
**கூதளங் கவினிய குளவி முன்றில்**
**செழுங்கோள் வாழை அகல்இலைப்**
**பகுக்கும்**

என்று புறநானூற்றில் 168 ஆவதாக இடம்பெறுகின்ற பாடலிலே கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார் என்ற புலவர் புதிர் உண்ணுகின்ற செய்தியைப் பதிவு செய்துள்ளார். புதிதாகக் கறந்து நுரையெழும்பும் தீம் பாலிலே புத்தரிசியையிட்டு, சந்தனக்கட்டைகளை விறகாகக் கொண்டு அடுப்பெரித்து ஆக்கிய பொங்கலைப் பலரோடு பகிர்ந்து உண்ணுகின்ற வழக்கத்தை அழகாகச் சொல்கின்றார் புலவர்.

அத்தகைய தொன்மைச் சிறப்பு வாய்ந்த பொங்கல் பண்டிகை உழவர்களுக்கு மட்டும் உரியதல்ல. உழுவார் உலகத்தார்க்கு அச்சாணியானவன் என்கின்றார் வள்ளுவர். எனவே, கதிரவனுக்கு நன்றிசெலுத்தும் பொங்கல் உலகத்திற்கே பொதுவானது. அதை உணர்ந்து தான் பண்டைத் தமிழர்கள் ஆண்டுத் தொடக்கத்திலேயே அதனை ஒரு பண்டிகையாகக் கொண்டாடும் வழக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

சிந்துவெளி நாகரிகக் காலத்திற்கு முந்தியிருந்தே இந்தப் புத்தாண்டும், பொங்கல் பண்டிகையும் கொண்டாடப்பட்டு வந்தமையை அறிவியல்பூர்வமான ஆராய்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன. சிந்துவெளி மக்கள் தைமுதல் மார்கழி வரையான பன்னிரண்டு மாதங்களையே தமிழ் மாதங்களாகப் பின்பற்றிவந்துள்ளனரென்று வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் சான்று பகர்ந்துள்ளனர். தை முதல் மார்கழி வரையான பன்னிரண்டு மாதப் பெயர்களும் சுத்தமான தமிழ்ப் பெயர்கள் என்பதுடன், தொல்காப்பியர் காலத்திலேயே அவை வழக்கத்திலிருந்தன என்று கூறுகின்றார் மொழியறிஞர் சி. இலக்குவனார் அவர்கள். யேசு கிறீஸ்த்துவின் பிறப்பை அடிப்படையாகக் கொண்டு கி.மு என்றும் கி.பி. என்றும் உலக வரலாறு வரையறுக்கப்பட்டு வருகின்றது. அதேபோலப் புத்தரின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு புத்த சமயத்தினர் புத்த ஆண்டு என்று கணித்துப் பின்பற்றுகின்றார்கள். இவற்றுக்கெல்லாம் எத்தனையோ ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட தமிழ்ப் புத்தாண்டு வழக்கத்தை இடையிலே கைவிட்டுவிட்டு எதையெதையோவெல்லாம் தமிழர்கள் பின்பற்றுவது எவ்வளவு துர்ப்பாக்கியமானது.

தைமுதல்நாள் தமிழர் திருநாள் மட்டுமல்ல, அதுவே தமிழ்ப்புத்தாண்டின் தொடக்க நாளுமாகும். அதனால்தான், தமிழ்ப் புத்தாண்டுபற்றிய உண்மைநிலையைத் அறிவுபூர்வமாகவும், ஆராய்ச்சியின் அடிப்படையிலும் தமிழ்மக்களுக்கு உணர்த்துவதற்காக, 1921 ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியிலே தமிழ் அறிஞர்கள், செந்தமிழ்ப் புலவர்கள் கூடி ஆராய்ந்திருக்கிறார்கள். தமிழ்க்கடல், நிறைதமிழ் அறிஞர் மறைமலை அடிகள் அவர்களது தலைமையிலே அந்த ஆராய்ச்சி நடைபெற்றிருக்கின்றது.

மாபெரும் தமிழறிஞர்களும் கல்விமான்களுமான தமிழ்த்தென்றல் திரு.வி. கல்யாணசுந்தரனார், தமிழ்க்காவலர் கா. சுப்பிரமணியம்பிள்ளை, சைவப்பெரியார் சச்சிதானந்தம்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோர் அந்த அறிஞர் குழுவிலே இருந்திருக்கிறார்கள்.

அத்தனை அறிஞர் பெருமக்களும் ஒன்றாகக்கூடி தமிழ்ப் புத்தாண்டு பற்றி ஆராய்ந்திருக்கிறார்கள். முடிவுகண்டிருக்கிறார்கள். 500 இற்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்கள் அந்த முடிவிற்குத் தமது ஏற்பிசைவை வழங்கியிருக்கின்றார்கள். அவர்களது முடிவின்படி இயேசுகிறீஸ்த்து பிறப்பதற்கு 31 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்தவர் திருவள்ளுவர் என்றும், அவரது பெயரில் தொடர் ஆண்டுக் கணக்கீட்டைப் பின்பற்றுவது என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அந்த முடிவுகளின்படி, திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் தை. இறுதி மாதம் மார்கழி. புத்தாண்டுத் தொடக்கம் தை முதல்நாள் ஆகும். கிழமை நாள்கள் ஏழு. அவை, ஞாயிறு, திங்கள், செவ்வாய், அறிவன், வியாழன், வெள்ளி, காரி என்பனவாகும். புதனும், சனியும் தமிழ்ப்பெயர்கள் அல்லவென்பதால் அவற்றுக்கான பண்டைய தமிழ்ப்பெயர்களான அறிவன், காரி என்பன முறையே வழங்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. ஆங்கில ஆண்டுடன் 31ஐக் கூட்டினால் வருவது திருவள்ளுவர் ஆண்டு. அதுவே தமிழ் ஆண்டுக் கணக்கு.

அறிஞர்களது தீர்மானத்தை அன்றைய தமிழக அரசு அப்படியே ஏற்றுக்கொண்டது. அதன்படி திருவள்ளுவர் ஆண்டு முறையை 1971 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு நாட்குறிப்பிலும், பின்னர் 1972 இலிருந்து தமிழக அரசின் அதிகாரபூர்வமான இதழிலும், 1981 இலிருந்து தமிழகத்தின் அனைத்து அரசு அலுவலகங்களிலும் அரசு நடைமுறைப்படுத்தி வருகின்றது. 2009 இல் தமிழக அரசு தைப்பிறப்பையே தமிழ்ப்புத்தாண்டு என்றும் சித்திரைமாதத்தில் தமிழ்ப்புத்தாண்டு இல்லை என்றும் சட்டபூர்வமாக ஆணை பிறப்பித்தது. தமிழ் மக்களின் புத்தாண்டு விடயத்திற்குச் சட்டரீதியான அந்தஸ்துக் கொடுக்கப்பட்டமை மகிழ்ச்சிக்குரிய விடயமே.

ஆனால், தைப்பிறப்பைத் தமிழ்ப் புத்தாண்டென அரசாணை பிறப்பித்தது கலைஞர் கருணாநிதி அவர்களின் தி.மு.க. அரசு என்ற ஒரே காரணத்திற்காக, அவருக்குப் பிறகு, ஆட்சிக்கு வந்த செல்வி. ஜெயலலிதா அவர்கள் அந்த அரசாணையை மாற்றி, சித்திரையே தமிழ்ப் புத்தாண்டு என தீர்மானம் போடும் முடிவுக்கு வந்தார். தைப்பிறப்பே தமிழ்ப்புத்தாண்டு என்பது கலைஞர் கருணாநிதியின் தீர்மானம் அல்ல. கலைஞர் பிறப்பதற்கு முன்னரே, 1921 ஆம் ஆண்டு தமிழ் இனத்தின் சார்பாகத் தமிழ்ப் புலவர்களாலும், அறிஞர்களாலும் எடுக்கப்பட்ட முடிவு அது.

தைமாதத்தைத் தமிழ்ப்புத்தாண்டு என்று கொண்டாடினால் கிரக மாற்றங்களில் குளறுபடி ஏற்படுமாம் பஞ்சாங்கக் கணிப்புத் தவறாகிவிடுமாம் என்றெல்லாம் சிலர் மக்களைக் குழப்புகின்றார்கள். இது என்ன பேதைமை! சித்திரையை அடிப்படையாக வைத்துத்தான் கிரக சஞ்சாரங்கள் நடைபெறுகின்றன என்றால் அவை அப்படியே நடக்கட்டும். அவற்றுக்கு அமைவாக எழுதப்பட்ட பஞ்சாங்கங்கள் அப்படியே இருக்கட்டும். சித்திரை மாதக் கிரக நிலையைத் தைமாதத்திற்கு நகர்த்தும்படி யாரும் கூறவில்லை. பஞ்சாங்கங்களைத் திருத்தும்படி யாரும் சொல்லவில்லை. அதற்கு அவசியமும் இல்லை. ஆனால் சித்திரை மாதம் என்பது தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் அல்ல. தைமாதமே தமிழ்ப் பத்தாண்டின்முதல் மாதம் என்றும், தைமுதல் திகதியே தமிழ்ப் புத்தாண்டின் முதல்திகதி என்றும் கொண்டாடுவோம். அவ்வாறு நாம் கொண்டாடுவதால் கிரகமாற்றங்களில் கோளாறு ஏற்படும் என்பதும், பஞ்சாங்கம் பொய்த்துவிடும் என்பதும் மூடநம்பிக்கைகள். மடத்தனமான விதண்டாவாதங்கள். மக்களைக் குழப்பும் முயற் சிகள்.

தையே முதற்றிங்கள் தைம்முதலே ஆண்டுமுதல் பத்தன்று, நூறன்று, பன்னூறன்று பல்லாயிரத்தாண்டாய்த் தமிழர் வாழ்வில் புத்தாண்டு, தைமுதல் நாள், பொங்கல் நன்னாள்

என்று தைத்திங்கள் திருநாளை, தமிழினத்தின் திருநாளாக, தமிழ் வருடத்தின் முதல்நாளாக, தமிழ்ப பண்பாட்டின் பெருநாளாக போற்றிப் பாடுகின்றார் புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் அம்மொழியே பொன் மொழியாகட்டும். அனைத்துலகத் தமிழர்களுக்கும் ஒரே வழியாகட்டும்.

எனவே தைமுதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டெனக்கொண்டாடும் நமது பண்டைய வழக்கத்தினை உலகத் தமிழ் மக்கள் அனைவரும் வழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். வாழ்வில் கடைப் பிடிக்கவேண்டும்.

பொங்கல் பண்டிகைக்கு முதல்நாள் கடந்து விட்ட வருடத்தின் கடைசிநாள்.

வீட்டிலுள்ள வேண்டத்தகாத பொருட்களையெல்லாம் வீசி எறியும் நாள். வீட்டிலும், வீட்டைச்சுற்றவரவும், காணிகளிலும் உள்ள அழுக்குக்களை, குப்பை கூளங்களையெல்லாம் கூட்டிப்பெருக்கித் தீயிட்டுக் கொளுத்தி துப்பரவுசெய்யும் நாள்.

புலரும் பொழுதில், மலரும் பொங்கல் பண்டிகையை, புத்தாண்டுப் பிறப்பை வரவேற்க வீடுகள்தோறும் விடியவிடிய மகிழ்ந்திருக்கும் நாள்.

வீட்டுச்சுவர்களுக்கு வெள்ளையடிப்பதும், வர்ணச்சாயம் தீட்டுவதுமாக அன்றைய நாள் முழுவதும் ஊரே மகிழ்ச்சியில் அமர்க்களப்படும். அந்த நாளைப் போகி நாள் என்று சொல்வார்கள்.

கடந்த வருடத்தைப் போக்குதல், கஷ்டங்களைப் போக்குதல், உறவினர்களுக்கிடையே இருந்த உரசல்களைப் போக்குதல், அகத்திலும் புறத்திலும் உள்ள அழுக்குகளைப் போக்குதல் என்றெல்லாம் பொருளமைந்ததுதான் போகி நாள், போகிப் பண்டிகை!

திருமணமாகித் தனிக்குடும்பம் நடாத்தும் தங்கள் பெண்களுக்கும், சகோதரிகளுக்கும் பெற்றோரும், சகோதரர்களும் சீர்வரிசை செய்வதும் அன்றைய நாளில்தான்.

நெல்லு, அரிசி, குரக்கன், சோளம் முதலிய தானியங்கள், முக்கனிகள், இனிப்புப் பலகாரங்கள், புத்தாடைகள், அலங்காரப் பொருட்கள் என்பவற்றையெல்லாம் இல்லறம் நடத்தும் தம் பிள்ளைகளின் வீடுகளுக்கு எடுத்துச்சென்று கொடுத்து மகிழ்வார்கள். இல்லத்தையும், சுற்றுப்புறத்தையும் எல்லோருமாகச் சேர்ந்து துப்புரவு செய்து, புதுப்பொலிவு ஊட்டுவார்கள்.

அது பொங்கல் பண்டிகைக்கு முதல் நாள். புத்தாண்டுக்கு முதல்நாள்.

கடக்கும் வருடத்தின் கடைசிநாள். அதுதான் போகிநாள்!

தைத் திங்கள் முதல்நாளே தமிழர் நமது புதுவருடப் பெருநாள். தங்கத் தமிழினத்தின் தைப்பொங்கல் திருநாள். எனவே, பொங்கல் திருநாளிலேயே நமக்குப் புது வருடம் பிறக்கிறது என்பதை, பொங்கல் திருநாளே நமது புத்தாண்டு என்பதை, எங்கும் பறை சாற்ற வேண்டும். எப்போதும் அதனைப் பின்பற்ற வேண்டும். தப்பாமல் நம் வாழ்நாளில் கடைப்பிடிக்க வேண்டும்.

வாசலில் கோலமிட்டு, மாவிலையிலும், மஞ்சள் குருத்தோலையிலும் தோரணங்கட்டி, புத்தரிசி கொண்டு, புதுப்பானையில் பொங்கலிட்டு, தலைவாழையிலையில் பொங்கலும், பழங்களும், கரும்பும் படைத்து, கதிரவனை நோக்கிக் கை கூப்பித்தொழுது நன்றிதெரிவிக்கும் நன்னாளே பொங்கல் திருநாள்.

காலையில் வழிபாடு. பகலில் உறவினர்களோடு மகிழ்ந்து உறவாடல். உணவு பரிமாறல். உண்டு களைப்பாறல். மாலையில் களியாடல். கலைகள் அரங்கேறல். ஊரே திரண்டு ஒன்றாய் மகிழ்ந்து கொண்டாடல். இதுதான் தமிழரின் தாயகங்களின் தைத்திருநாள். அது வருடத்தில் ஒருநாள். புத்தாண்டின் முதல் நாள். தமிழருக்கு அது பெருநாள்.

வாழ்க தமிழ் வணக்கம்

**சட்டத்தரணி,**
**பாடும்மீன்,**
**சு. ஸ்ரீகந்தராசா**

# நாட்டில் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தக் கோரிக்கை

## சந்திரகுமார் வலியுறுத்து



கிளிநொச்சி,ஜன.15
நாட்டில் ஊடகச்சுதந்திரமும், கருத்துச்சுதந்திரமும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். கடந்த வாரம் சில ஊடகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கண்டிக்கதக்கதோடு, அவ்வாறான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் இடம்பெறாதும் இருக்க வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் கொழும்பில் சில ஊடக நிறுவனங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

இது கவலையளிக்கும் விடயமாகும், எந்த நாட்டில் ஊடகத்துறைக்கும், ஊடக வியலாளர்களுக்கும் பாதுகாப்பும் சுதந்திரமும் வழங்கப்படுகிறதோ அந்த நாட்டில் ஜனநாயகம், பாதுகாக்கப்படுவதோடு, நல்லாட்சியும் உறுதி செய்யப்படுகிறது.

அத்தோடு மக்கள் நலன் மேம்பாடுகளும் அதிகரிக்கும். அந்த வகையில் ஊடகத்துறையின் பாதுகாப்பையும், சுதந்திரத்தையும் உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமையும் பொறுப்புமாகும்.

நல்லாட்சியில் ஊடகச் சுதந்திரம் குறித்தும் ஊடகவியலாளர்கள் நலன்கள் குறித்தும் அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது என அறிவித்தல்கள் மாத்திரமே வெளியாகின்றனவே தவிர செயற்பாடுகள் பல அவற்றுக்கு எதிராகவே உள்ளன.

ஊடகங்கள் உண்மைக்கு புறம்பாகவோ அல்லது சட்டத்துக்கு மாறாகவோ செயற்படுகின்ற போது சட்டத்தின் உதவியை நாடவேண்டுமே தவிர ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்தும் வகையில் செயற்பாடுகள் கொண்டு செல்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

இது கண்டிக்கத்தக்கது. எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு



இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஒன்பது மீனவர்களையும் எதிர் வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நெடுந்தீவு கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபட்ட ஒன்பது மீனவர்களை கைதுசெய்த இலங்கை கடற்படையினர் அவர்களின் இரு படகுகளையும் கைப்பற்றினார்கள்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்களை நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை யாழ்ப்பாணம் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

அதனைத் தொடர்ந்து நீரியல் வளத்துறை அதிகாரிகளால் ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் மீனவர்கள் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# கிழக்கில் நான்கு பாடசாலைகள் தேசிய கல்லூரிகளாக தரமுயர்வு

திருகோணமலை,ஜன.15
கிழக்கு மாகாணத்தில் 4 பாடசாலைகளை தேசியக் கல்லூரிகளாக தரமுயர்த்த கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் பணிப்புரை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ்.டி.எம். அஸங்க அபேவர்தன இவ்விடயம் தொடர்பாக மத்திய கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது–



பிரதேச மக்களின் நீண்டகால வேண்டுகோளைக் கருத்திற் கொண்டு வாழைச்சேனை இந்துக் கல்லூரி, செங்கலடி மகா வித்தியாலயம், களுதாவளை மகா வித்தியாலயம், பொத்துவில் மத்திய கல்லூரி ஆகியவற்றை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்த கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இப்பாடசாலைகளை தேசிய கல்லூரிகளாகத் தரமுயர்த்துமாறு மாகாணக் கட்டமைப்புக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மாகாணக் கல்விப் பணிப்பாளர், தொடர்பான அதிகார மட்டத்தினர், மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் அங்கீகரித்துள்ளார்கள்.

எனவே, இது குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் எனக் குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வினோத பட்டப் போட்டித் திருவிழாவும் கல்விச் சாதனையாளர் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம்,ஜன. 15
வல்வை விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் வல்வெட்டித்துறையின் 2019 ஆம் ஆண்டுக்கான மாபெரும் விநோத பட்டப்போட்டித் திருவிழாவும், கல்விச் சாதனையாளர்களின் கௌரவிப்பு நிகழ்வும் தைப்பொங்கல் தினமான இன்று செவ்வாய்க்கிழமை வல்வை உதயசூரியன் உல்லாச கடற்கரையில் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறவுள்ளது.

வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலைய தலைவர் வி.கவிச்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளர் கோ. கருணானந்தராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# சின்மய நாதம் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜன. 15
யாழ் சின்மயா மிஷனின் காலாண்டுச்சஞ்சிகையான சின்மய நாதம்- தை/பங்குனி 2019 இதழ் இன்று தைப்பொங்கல் தினத்தன்று மாலை 4.30 மணிக்கு இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மயாமிஷன் பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ் சின்மயா மிஷன் அழைக்கிறது.

# குறைந்த வயது நெல்லினச்செய்கையை பார்வையிட்ட விவசாய அதிகாரிகள்!



காரைதீவு.ஜன15
கிழக்கு மாகாண விவசாயத்திணைக்களம் ஏற்பாடுசெய்துள்ள வேலைத்திட்டத்தின்கீழ் நிந்தவூரில் செய்கையிடப்பட்ட குறைந்த வயதுடைய நெல்லினச்செய்கையை (பிஜி.250) நிந் தவூர்ப் பிரதேச உதவி விவசாயப்பணிப்பாளர் திருமதி அழகுமலர் ரவீந்திரன் நிந்தவூர்ப் பிரதேச விவசாய போதனாசிரியர் திருமதி சஜிகலா ரகுநந்தன் ஆகியோர் பார்வையிட்டனர்.

அத்துடன் சிவப்பு மகளிர் பப்பாளிச்செய்கையையும் அவர்கள் பார்வையிட்டனர்.

# கச்சதீவு திருவிழாவில் பங்கேற்க இந்திய பக்தர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜன15
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் கலந்து கொள்ளுமாறு இந்திய பக்தர்களுக்கு, யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருவிழா இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் இந்த திருவிழாவில் பங்கேற்க இந்திய, இலங்கை நாடுகளைச் சேர்ந்த பக்தர்களுக்கு யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அழைப்புவிடுத்துள்ளார்.

இதேவேளை திருவிழா குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் மட்டத்திலான முதல் கட்ட ஆய்வுக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடமையைப் பொறுப்பேற்றார் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப்

கொழும்பு,ஜன.15
துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை பிரதியமைச்சராக ஜனாதிபதி முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட அப்துல்லா மஹ்ரூப் நேற்று (14) திங்கட்கிழமை தனது கடமைகளை சர்வமத அனுஷ்டானங்களின் பின் கொழும்பில் உள்ள பிரதி அமைச்சர் அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் சாகல ரத்நாயக்க, வர்த்தக கைத்தொழில் மற்றும் நீண்டகாலம் இடம்பெயர்ந்தோரை மீளக் குடியேற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் பௌசி உட்பட பிரதியமைச்சரின் குடும்பஸ்தர்கள் என பலரும் பங்கேற்றார்கள்.





# பொங்கல் வைப்போம்

மங்கலமாய் மலர்ந்து விட்டாள் தைமகள்
மகிழ்வுடனே வரவேற்றுப் பொங்கல் வைப்போம்
சிங்களமெனச் சீறிய சிறுமைகளைச் சேர்த்து
எங்களுக்குள் போட்டிகளை வளர்த்துக் கொண்டால்
ஏங்கும் அமைதி வாழ்வு ஏற்படுமா?
எப்படி அவன் தருவான் நமக்குத் தீர்வு
பாங்குடனே பக்குவமாய்ப் பகைமை விடுத்து
ஓங்கியே ஒன்றுபட்டால் மலரும் வாழ்வு

செங்கதிரோன் வரவுகண்டு பொங்கல் வைப்போம்
செய்நன்றி மறந்திடாது பொங்கல் வைப்போம்
எங்கள் இடங்களெல்லாம் பொங்கல் வைப்போம்
எண்ணியொரு இனிய தமிழ் பொங்கல் வைப்போம்
மங்கையெனப் பிறந்துள்ள தைமகளை அலங்கரித்து
மனைகளெல்லாம் கோலமிட்டு பொங்கல் வைப்போம்
தங்கம்நிகர் தமிழ் மகளை வரவேற்று
தமிழரெல்லாம் பொங்கியே மகிழ்ந்திருப்போம்!

அபிராஜன் அன்ரனி பீற்றர்
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்.

# புதியதோர் சகாப்தத்தை படைக்கப் பிரார்த்திப்போம்



பன்னிரு இராசிகளில் சூரிய பகவானின் அசைவே உலக இயக் கத்திற்கு ஆதாரமா கின்றது. சூரியன் மகர ராசியினுள் பிர வேசிக்கும் மகரசாங்கிராந்தியே தைப் பொங்கல் திருநாளாகின்றது. இந் நாளில் அனைவர் உள்ளங்களிலும் மங்களம் பொங்கவேண்டும் எனஎமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இம் மங்கலகரமான பொங்கல் புதியதோர் சகாப்தத்தை உலகில் படைக்க எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமானை மன மொழி மெய் களால் பிரார்த்திப்போமாக.

"நமச்சிவாய வாழ்க"

**சி.சக்திகிரீவன்**
**செயலாளர், இந்து சமய பேரவை,**
**யாழ்ப்பாணம்.**

# தை மகளே வருக. எங்கள் தமிழ் மகளே வருக!!



இன்றுதைப்பொங்கல்திருநாள். தனித்துவம் நிறைந்த நன்னாள். அத்துடன் தமிழர் தம் வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தப்போகும் இனிமையான ஒரு பெருநாள் ஆகும்.

வீட்டு முற்றத்திலே கோலம் போட்டு சாணகத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து பூவும் வைத்து சாம்பிராணி தூப தீபம் காட்டி தேவார திருவாசகங்களைப் பக்தியுடன் பாராயணம் செய்து விரதமிருந்து சூரியனுக்கு நன்றி பராபரங் கூறி துய நிறப் புஸ்பம் சாய்த்து வணங்குவது எமது தலையாய கடமை யாகும். மேலும் சர்க்கரை, தேன், கஜு, பிளம்ஸ் என்பவற்றை லிங்கத்துக்கு சாத்தி வைத்து இன்றைய நன்னாளிலே இனிப்பான பொங்கல் பொங்கிப் படைத்து நம்பி நல்கி வடை எடுப்பதோடு மோதகம் என்பவற்றை படைத்து தேவார பாராயணத்துடன் வாழ்வாங்கு வாழ அவனருளையே நாடி நிற்போமாக.

**காலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்**

# தமிழருக்கு இந்தப்....

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்பு வரைவானது தனி நபர்களின் சுயநல சுகபோகங்களுக்கு உடனடித் தீர்வைக் கொடுக்குமே தவிர, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு நிலையான தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் என்று தமிழ் மக்கள் நம்பவில்லை.

தமிழ் மக்களை காலத்திற்குக் காலம் உசுப்பேற்றி தங்களின் அரசியல் நலன்களை முன்னிறுத்தி செயற்படுவோர், தொடர்ந்தும் இல்லாத ஊருக்கே வழிகாட்டுகின்றார்கள். அவர்கள் காட்டும் வழியில் தமிழ் மக்கள் போய்ச் சேர அங்கே ஓர் இலக்கில்லை என்பதையே பல தசாப்தங்களாக நாம் அவதானித்து வந்தி ருக்கின்றோம்.

வறுமையில் வாடுவோருக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தும், இயற்கை அழிவால் பாதிக்கப்பட்ட மக் களுக்கு காலம் தாழ்த்தாது நஷ்ட ஈடுகளைப் பெற்றுக்கொடுத்தும் துன்பத்திலிருந்து எமது மக்களை மீட்டெடுக்கப்படும் பொழுதே திருநாள் கொண்டாட்டங்கள் மகிழ்ச்சியுள்ளதாக அமையும்.

அதைவிடுத்து எமது மக்களின் அடுப்படியில் பூனைகள் தூங்கிக் கிடக்கும் வறுமையான வாழ்வில், பொங்கலும், ஏனைய பண்டிகைகளும் மகிழ்ச்சியானதாக அமையாது. எனவே பொருளாதார தன்னிறைவோடு மகிழ்ச்சியாக எமது மக்கள் வாழ்வதற்கு புதிய வழியை பிறக்கச் செய்யும் பொங்கலாக இந்தப் பொங்கலாவது அமையட்டும் என்றும் அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# வடக்கின் துடுப்பாட்ட கிண்ணத்தை சுவீகரித்தது யாழ். மாவட்ட அணி



யாழ்ப்பாணம்,ஜன.15

இளம் வீரர்களுக்கான (23 வயதுக்குட்பட்டோருக்கான) மாவட்டங்களுக்கிடையிலான மாகாண ரீதியிலான கிரிக்கெட் தொடரின், வட மாகாணத்துக் கான போட்டித்தொடரின் இறுதிப் போட்டியில் வவுனியா அணியை 7 விக்கெட்டுக்களால் வீழ்த்தி யாழ் பாடசாலைகள் வீரர்கள் (யாழ்ப்பாணம் அணி) சம்பியன் கிண்ணத்தினை சுவீகத்தனர்.

இலங்கை துடுப்பாட்ட சங்கத் தால் வடமாகாண மாவட்டங்க ளுக்கிடையே நடத்தப்பட்ட 50 பந்து பரிமாற்றங்களை கொண்ட 23 வயதுக்குட்பட்ட அணிகளுக் கான கடினப்பந்து சுற்றுப்போட்டி யின் இறுதிப் போட்டி நேற்றுமுன் தினம் (13) காலை 10 மணியள வில் வவுனியா நகரசபை மைதா னத்தில் வவுனியா மாவட்ட கடி னப் பந்து துடுப்பாட்ட சங்கத்தின் தலைவர் யோ.ரதீபன் தலை மையில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ் மாவட்ட அணி களத் தடுப்பை தெரிவு செய்து வவுனியா மாவட்ட அணியினை துடுப்பெடுத் தாட பணித்தது. அதன்படி களமி றங்கிய வவுனியா மாவட்ட அணி 27.5 பந்துபரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 94ஓட்டங்களை மாத்தி ரம் பெற்றுக்கொண்டது. அதிகபட் சமாக சயரூபன் 29 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் யாழ் அணி சார்பாக விதுசன் 3 இலக்குகளையும், நிதுசன் 3 இலக் குகளையும் பெற்றுக் கொடுத்த னர்.

95 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்குடன் களமிறங்கிய யாழ் மாவட்ட அணியினர் 15.4 பந்து பரிமாற்றங்களில் மூன்று இலக் குகளை மாத்திரம் இழந்து 95 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றனர். துடுப்பாட்டத்தில் யாழ் அணி சார்பாக பானுசன் 31 ஓட் டங்களைப் பெற்று கொடுத்திருந் தார்.

போட்டியின் ஆட்ட நாயகனாக யாழ் அணியின் விதுசன் தெரிவு செய்யபட்டதுடன், சிறந்த துடுப் பாட்ட வீரராக யாழ் அணியின் பானுசன். சிறந்த பந்து வீச்சாள ராக யாழ் அணியைச் சேர்ந்த நிதுசன் தெரிவுசெய்யப்பட்டிருந் தனர்.

இந்நிகழ்வில் வடமாகாண துடுப்பாட்ட சங்கத்தலைவர் மதி வாணன், முன்னாள் நாடாளும ன்ற உறுப்பினர் வினோநோக ராதலிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், வடமாகாண துடுப்பாட்ட பயிற்று விப்பாளர்கள், விளையாட்டு வீரர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## யாழ்.சுப்பர் லீக் சுற்றுத் தொடர்

# பண்ணை ரில்கோ கிளாடியர்ஸை வீழ்த்தியது தெல்லியூர் ரைரன்ஸ்



யாழ்.சுப்பர் லீக் சுற்றுத் தொடரின் நான்காவது ஆட்டத்தில் தெல்லியூர் ரைரன்ஸ் அணியினர் பண்ணை ரில்கோ கிளாடியர்ஸ் அணியை வீழ்த்தி இரண்டு இலக்குகளால் வெற்றிபெற்றுள்ளனர்.

யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தெல்லியூர் ரைரன்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய பண்ணை ரில்கோ கிளாடியர்ஸ் அணியினர் 20 பந்து பரிமாற்றங்களை எதிர் கொண்டு 09 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களைப்பெற்றுக் கொண்டனர். துடுப்பாட்டத்தில் பண்ணை ரில்கோ கிளாடியர்ஸ் அணி சார்பாக அனஸ்ராஜ் 29 ஓட் டங்களையும்தர்ஷிகன் 29 ஓட்டங்களையும் கௌத மன் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் தெல்லியூர் ரைரன்ஸ் அணி சார்பாக 04 பந்துப்பரிமாற்றங்களில் சுஜாந்தன் 32 ஓட்டங்களைவிட்டு கொடுத்து 03 இலக்குகளைச் சாய்த்தார். கபிலன் 04 பந்துப்பரிமாற்றங்களை வீசி 25 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 02 இலக் குகளைச் சாய்த்தார்.

134 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி எனதுடுப்பெடுத் தாடிய தெல்லியூர் ரைரன்ஸ் அணியினர் 20 பந் துப் பரிமாற்றங்களில் 08 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றனர். அஜீத் 27 ஓட்டங்களையும் கஜீபராஜ் 22 ஓட்டங் களையும் கபிலன் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பண்ணை ரில்கோ கிளாடியர்ஸ் அணி சார்பாக அனஸ்ராஜ் 04 பந்துப்பரிமாற்றங் களை வீசி 15 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 03 இலக்குகளைச் சாய்த்தார்.

மதன் 04 பந்துப்பரிமாற்றங்களை வீசி 16 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 03 இலக்குகளை சாய்த்தார். இதன் மூலம் தெல்லியூர் ரைரன்ஸ் 02 இலக்குகளால் வெற்றி பெற்றது.

நடைபெற்ற நான்காவது போட்டியில் சிறப்பாகச் செயற்பட்ட கபிலன் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

# சுப்பர் சுற்றுக்கு தெரிவாகும் வாய்ப்பை பிரகாசப்படுத்திய வேலணை வேங்கைகள்

யாழ்.சுப்பர் லீக் சுற்றுத் தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் கொக்குவில் ஸ்ரார்சை எதிர்த்தாடிய வேலணை வேங்கைகள் ஐந்து இலக்குகளால் அபார வெற்றியடைந்துள்ளது. இதன்மூலம் வேலணை வேங்கைகள் அணி சுப்பர் சுற்றுக்கு தெரிவாகும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வேலணை வேங்கைகள் அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது.

அதனடிப்படையில் முதலில் துடுப்பெடுதாடிய கொக்குவில் ஸ்ரார்ஸ் அணியினர் 19.3 பந்து பரிமாற்றங்களை எதிர்கொண்டு அனைத்து இலக்கு களையும் இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். துடுப்பாட்டத்தில் ஜனுதாஸ் 40 ஓட்டங்களையும் ஜான்சன் 22 ஓட்டங்களையும் ஜெயரூபன் 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத் தனர்.

பந்து வீச்சில் வேலணை வேங்கைகள் அணி சார்பாக 3 பந்துப்பரிமாற்றங்களில் மதுஷன் 20 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 இலக்குகளைச் சாய்த்தார். விதுஷன் 3 பந்துப்பரிமாற்றங்களை வீசி 21 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 2 இலக்கு களைச் சாய்த்தார்.

148 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என துடுப் பெடுத்தாடிய வேலணை வேங்கைகள் அணியி னர் 16.3 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். சத்தியன் 53 ஓட்டங்களையும் அணித் தலைவர் மணிவண்ணன் 28 ஓட்டங்க ளையும் பெற்றுக்கொண்டனர்.

கொக்குவில் ஸ்ரார்ஸ் அணிசாபாக சுபேந்திரன் 3.3 பந்துப்பரிமாற்றங்களை வீசி 28 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 இலக்குகளைச் சாய்த்தார். கிருஷ்ணதீபன் 2 பந்துப்பரிமாற்றங்களை வீசி 20 ஓட்டங்களை கொடுத்து 1 இலக்கைச் சாய்த்தார்.

இதன் மூலம் 5 இலக்குகளால் வேலணை வேங்கைகள் அணியினர் வெற்றி பெற்றனர். வேலணை வேங்கைகளுக்கு சிறப்பான வெற்றி யினைப் பெற்றுக்கொடுத்த சத்தியன் ஆட்ட நாயக னாகத் தெரிவு செய்யப்பட்டார்.

# கற்கோவளம் பகுதி இளைஞர் கொடூரமாக அடித்துக் கொலை!

## ஞாயிறு இரவு துயரச் சம்பவம்



யாழ்ப்பாணம், ஜன. 15

வடமராட்சிப் பகுதியில் இளைஞர் ஒருவர் அடித்துக்கொலை செய்யப்பட்டு உள்ளார்.

வடமராட்சி , பருத்தித்துறை கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த வாசுதேவன் அமல்கரன் (வயது 22) எனும் இளைஞனே அடித்துக் கொலை செய்யப்பட்டு உள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் வீட்டுக்குச் சற்றுத் தொலைவில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு நண்பர்களுடன் உரையாடிக்கொண்டு இருந்தார் எனவும், அப்போது அவருக்கு தொலைபேசி அழைப்பு வந்த தாகவும், அவர் அதில் உரையாடிக் கொண்டு சென்றபோது சற்றுத் தூரத்தில் நின்ற இனம் தெரியாத நபர்கள் கூரிய ஆயுதங்களால் அவரைத் தாக்கிவிட்டு தப்பிச் சென்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த நபரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-07)

### ஜெனீவாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளன.

மார்ச் மாதம் ஐ.நா உரிமைகள் பேரவை அமர்வு இடம்பெறவுள்ள நிலையிலேயே சிறிசேன இது குறித்து ஆராய்ந்து வருகின்றார் எனக் கூறப்படுகின்றது.

இணை அனுசரணையை விலக்கிக் கொள்ளவேண்டும் என்ற நிலைப்பாட்டை மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பின்பற்றி வருகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கவேண்டாம் என ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகப் பணியாற்றிய தற்போதைய வெளிவிவகாரச்செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க கேட்டுக்கொண்டிருந்தார்.

எனினும் வெளிவிவகார அமைச்சராகச் செயற்பட்ட மங்கள சமரவீர இந்த ஆலோசனையை புறக்கணித்து தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியிருந்தார் என்றும் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

### அமெரிக்கக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கக் குடியுரிமையைக் கைவிடுவதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளார் என்று வெளியாகிய தகவல்களை உறுதிப்படுத்த அவரது பேச்சாளர் மறுத்துள்ளார்.

கோட்டாபய அண்மையில் அமெரிக்காவுக்கு மேற்கொண்ட பயணத்தின்போது, அமெரிக்க குடியுரிமையைத் துறப்பதற்கான ஆவணங்களைக் கையளித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

எனினும், இந்த ஊகங்களை நிராகரித்துள்ள கோட்டாபயவின் பேச்சாளர் மிலிந்த ராஜபக்ஷ, கோட்டாபயவின் அமெரிக்கக் குடியுரிமை பற்றிப் பகிரங்கப் படுத்த முடியாது என்று கூறியுள்ளார்.

இது தனிப்பட்ட விடயம் என்றும், அதனைப் பகிரங்கப்படுத்த முடியாது எனவும், கூறிய அவர், இந்தச் செய்திகள் தொடர்பாகக் கருத்து வெளியிடவும் மறுத்துள்ளார்.

கோட்டாய ராஜபக்ஷ சமர்ப்பித்துள்ள குடியுரிமை துறப்பு ஆவணங்கள் தொடர்பாக, தகவல்களை அனுப்புமாறு கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் அமெரிக்காவில் இருந்து கோரப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், அத்தகைய எந்த ஆவணமும் கிடைத்ததா என்பது பற்றி அமெரிக்கத் தூதரகம் உறுதிப்படுத்த மறுத்துள்ளது. (ஐ)

# புதிய அரசமைப்பு குறித்து தெளிவுபடுத்த தயக்கம் காட்டும் அரசியல் தலைமைகள்

## தவராசா குற்றச்சாட்டு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 15

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பிலும் தற்போது வெளிவந்திருக்கும்வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளவிடயங்கள்தொடர்பிலும் உண்மையைக் கூறுவதற்கு அரசியல் தலைமைகளும் புத்திஜீவிகளும் ஏன் தயங்குகின்றனர் எனக் கேள்வியெழுப்பியுள்ள வடக்கு மாகாண முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் எஸ்.தவராசா, மக்களுக்கு உண்மையைக் கூறுவதற்கு இவர்கள் முன்வர வேண்டுமென்றும்கோரியுள்ளார்.

சுமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் தற்போது புதிய அரசமைப்பு உருவாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் வெளியாகும் கருத்துக்கள் தெற்கிலும் வடக்கிலும் வேறுபட்டதாக உள்ளன. அதிலும் அரசியல் தலைவர்களும் முன்னுக்குப் பின் முரணாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

அதாவது ஒற்றையாட்சி என்றும் ஒருமித்த நாடென்றும் சமஷ்டி என்றும் கூறுகின்றனர். ஆனால் என்னைப் பொறுத்தவரை வரைவில் கூறப்பட்டுள்ளது ஒற்றையாட்சி அல்ல என்பதைக் கூறுகின்றேன். தமிழ் மக்களின் அபிலாஷைகளை முழுமையாகத் தீர்க்கக் கூடிய வரைவாக அது இல்லாவிட்டாலும் அதில் இன்னும் எமக்குத் தேவையான சில சில மாற்றங்கள் செய்யவேண்டிய தேவைப்பாடுகள் இருக்கின்றன.

ஆகவே மக்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டியுள்ளது. ஆனால் அதன் உண்மையைச் சொல்வதற்கு புத்திஜீவிகளும், அரசியல் தலைமைகளும் தயங்குகின்றனர். குறிப்பாக ஆட்சியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி கூட பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றது. அத்தோடு தெற்கிலும் வடக்கிலும் பல்வேறு கருத்துக்களும் வெளியிடப்படுகின்றன.

குறிப்பாக வந்திருக்கும் வரைவு ஒற்றையாட்சியை அடிப்படையாகக் கொண்டதாக இல்லாமல் சமஷ்டிக் குணாதிசயங்களைக் கொண்டதாக இருந்தாலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துப்படி பௌத்தத்துக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் ஒற்றையாட்சித் தீர்வே வருமென தெட்டத் தெளிவாகக் கூறியிருக்கின்றார்.

ஆகையால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு இல்லாமல் இந்த வரைவு வர முடியாது. ஆகவே வெளிவந்திருக்கும் வரைவில் உள்ளவாறு அரசமைப்பு வருமா என்பதும் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படுமா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியே இந்த வரைவை எதிர்ப்பது போன்று அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மாறாக வேறு கருத்துக்களை முன்வைக்கின்ற போது இந்த வரைவு வருமென்று நாங்கள் எப்படி நம்ப முடியும்? மக்களை ஏமாற்றுவதற்காக ரணில் விக்கிரமசிங்க இப்போது நாடகம் போடுகின்றாரா அல்லது அதுதான் அவருடைய நிலைப்பாடா என்று கேள்வி எழுகிறது – என்றார். (ஐ-07)

# யாழ். மாநகர முதல்வருக்கு சி.ஐ.டியினர் இன்று அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ். மாநகர சபையின் முதல்வர்இமானுவேல்ஆர்னோல்ட்விசாரணைகளுக்காக குற்றத்தடுப்புப் பிரிவுக்கு இன்று முற்பகல் 11 மணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

யாழ். பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் இந்த அழைப்புநேற்றுவிடுக்கப்பட்டுள்ளதாக ஆர்னோல்ட் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கேபிள் கம்பங்களைஅகற்றும்நடவடிக்கையை நாங்கள்மேற்கொண்டிருந்தோம். சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில்சபையின்அனுமதிபெற்றுக் கொள்ளாமல் சட்டவிரோத கேபிள் கம்பங்கள் நாட்டப்பட்டிருந்தன.

அதனை அகற்றும் பணிகளில் நாங்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சம்பவ இடத்துக்கு வந்த சிலர் தாங்கள் ஒரு நிறுவனமென்றும், தாங்கள் சட்டவிரோதமாக அமைக்கவில்லை என்றும், அனுமதி பெறவேண்டிய இடத்தில் அனுமதியைப் பெற்றுள்ளதாகவும் மாநகர சபையிடம் அனுமதி பெறவேண்டிய அவசியமில்லை என்றும் தெரிவித்தனர்.

ஆனாலும் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அவற்றை அமைப்பதற்குச் சபையின் அனுமதி பெறப்படவேண்டுமென்று நாங்கள் தெரிவித்தோம். இல்லையென்று எம்முடன் வாதிட்ட அவர்கள், நாங்கள் செய்வது தவறு என்றும், தாம் நீதிமன்றம் செல்லவுள்ளனர் எனவும் கூறிச் சென்றிருந்தனர்.

இதன்பின்னணியிலேயேயாழ் பொலிஸ்நிலையக்குற்றத்தடுப்பு பிரிவில் எமக்கு எதிராக முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளனர். அந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்வதற்காகவே இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணக் குற்றத் தடுப்புப் பிரிவிற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது – என்றார். (ஐ-07)

### மொட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரமுனவைச் சேர்ந்தவராகவே இருப்பார் என்று, அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டு முடிவுக்குள், சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான புதிய கூட்டணியில் இருந்து ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்படுவார் என்றும் அவர் கூறினார்.

கடந்த தேர்தலில் சில மாவட்டங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளை விட, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அதிக பலத்தை நிரூபித்திருக்கிறது என்றும், எதிர்காலத் தேர்தல்களில் அதனை விடப் பெரிய பலத்தைப் பெறும் என்றும் பஸில் ராஜபக்ஷ கூறியிருக்கிறார்.

தற்போது தமது கட்சியின் இலக்கு ரணில் விக்கிரசிங்கவோ, சஜித் பிரேமதாஸவோ அல்லது நவீன் திசநாயக்கவோ அல்ல என்றும், அனைத்துலகச் சூழ்ச்சிக்காரர்களையே தாம் இலக்கு வைப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஐ)

### அதியுயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடுக்கப்படவுள்ளது.

பொது மற்றும் அரச சொத்துகளுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின்கீழேயே இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதற்கு அனுமதி வழங்குமாறுகோரும் யோசனை அடுத்த நாடாளுமன்ற அமர்வில் முன்வைக்கப்படவுள்ளது.

2018 நவம்பர் மாதம் 15, 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் விசாரிக்க சபாநாயகர் கரு ஜெயசூரியவினால் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

பிரதிச் சபாநாயகர் தலைமையிலான இந்தக் குழுவில் சமல் ராஜபக்ஷ, சந்திரசிறி கஜதீர ஆகியோர் உறுப்பினர்களாக பரிந்துரைக்கப்பட்டிருந்தாலும், விசாரணைகளில் அவர்கள் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### மாகாணசபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விடயம் தொடர்பில் சுமந்திரன் மேலும் கூறியவை வருமாறு:–

காலம் தாழ்த்தப்பட்டு வரும் மாகாண சபைத் தேர்தலை நடத்தச் செய்வதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்பு யாது என்ற சாரப்பட சில தினங்களுக்கு முன்னர் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கருத்தாடற் களத்திலும் என்னிடம் வினா எழுப்பப்பட்டது. அப்போது அதற்குப் பதிலளிக்கும் வாய்ப்புக் கிட்டவில்லை.

இந்தத் தேர்தல்களைக் காலதாமதமின்றி நடத்த வேண்டும் என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடு.

புதிய தேர்தல் முறைமை எத்தகையதாக அமைய வேண்டும் என்பதில் அரசியல் கட்சிகள் இடையே இணக்கமில்லை என்பதால் அத்தகைய முறைமை ஒன்றை ஏற்படுத்த முடியாமல் விடயம் இழுபட்டுச்சென்றது.

இவ்வாறு விவகாரம் இழுபடுகின்றமையால் – இதுவரை காலமும் நடைமுறையில் இருந்த – விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையில் தேர்தலை நடத்தலாம் என்று ஒரு யோசனை முன்வைக்கப்பட்டது. அப்படி நடத்துவதாயின் அதற்கு பழைய சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். அப்படிக் கொண்டு வருவதற்கான சட்டவாசகம் எத்தகையதாக அமைய வேண்டும் என்பது தொடர்பில் நானே ஒரு வரைவைத் தயாரித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்திருந்தேன்.

ஆனால், பழைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் இத்தேர்தல் நடத்தப்படுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டமையால் அந்த முயற்சி தடைப்பட்டிருந்தது. ஆனால் இப்போது, எப்படியும் இந்தத் தேர்தலை தாமதமின்றி நடத்த வேண்டும் என்று வலியுறுத்தும் சு.க., அதற்காகப் பழைய தேர்தல் முறைக்கு இணங்கலாம் எனப் பச்சைக் கொடி காட்டிவிட்டது.

அதனால், இனி எந்தவிதத் தாமதமுமின்றி இத்தேர்தலை பழைய முறைமையின் கீழ் நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

பழைய தேர்தல் முறைமையை கொண்டு வருவதற்கான சட்டம் அடுத்த ஒரு மாதத்துக்குள் நிறைவேற்றப்படும். அது நிறைவேறிய கையோடு தேர்தல் அறிவிப்பு வெளியாகி, தேர்தல் நடவடிக்கைகள் மும்முரமாக ஆரம்பிக்கும் என நம்புகிறோம். – என்றார் சுமந்திரன் எம்.பி. (உ)

# அனைவருக்கும் இனிய தைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்!

## கிருபா லேணர்ஸ்
## KIRUBAA LEARNERS

DS.589 அரச அங்கிகாரம் பெற்ற கனரக
(A) தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 021 492 3200, 071 454 6960


கல்விச் சேவைக்காக
ஜனாதிபதியால் வழங்கப்பட்ட விருது.

### ★★★ கல்விச்சேவையுடன் ஒன்றிய நிறுவனம் ★★★

★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

**யாழ்ப்பாணம்**
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550

**வவுனியா**
வவுனியா 024 222 7777

**மன்னார்**
மன்னார் 023 225 1656

**கிளிநொச்சி**
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி.
வடமாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை





HAPPY PONGAL

இனிய
தைத்திருநாள்
நல் வாழ்த்துக்கள்!

# S.V. முருகேசு

நாளைய
தலைமுறையின்
இன்றைய நம்பிக்கை




Anchor Since 1886
Gold

No:154, Hospital Road, Jaffna.
T.P: 021 222 8899,
021 492 5831

No:106, Hospital Road, Jaffna.
T.P: 021 492 5830, 021 222 4341
Fax: 021 222 4341


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.